KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 [illegible]

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஹூ அக்டோபர் மீ 2உ [No 39

8-NOV 1930

## பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 761 |
| 2. | குறுந்தொகை (பாட்டு 183—196) K. இராமரத்நம் ஐயர் B.A. | 763 |
| 3. | அப்பர் (இரத்தினப் பரிசை) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. | 767 |
| 4. | பிரஜைகளின் கடமை K. இராஜகோபாலன் | 769 |
| 5. | தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) | 771 |
| 6. | குருபரனுகி யருளிய பெருமை நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை | 773 |
| 7. | கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. | 775 |
| 8. | வர்த்தமானம் | 779 |

18123

## கலாநிலயம்

### பொழுதில்லாப் போய்.

அகல வுரைப்பதால் ஆவதென் என அயிர்க்கின்றோம் எனினும், ஆயிரத்தில் ஒருவரேனும் இப்பாட சாலைகளின் பரிபவத்தைப் பார்ப்பாரெனின் ஒருகால் உண்மையுணர்வு மாந்தரிடைப் பரவாதோ யென்னும் ஆசையால் இவையனைத்தும் எடுத்திங்கியம்பலாகின்றன. நற்பொரு ளொன்றை எத்துணை முறை கூறினும் குற்றமில்லை. பயனிலாப் படிற்றுரைகளே கூறக் கூறக் குற்றத்தால் மிகுகின்றன. நம் நாட்டில் கல்வியின் வளர்ச்சி விரைவுடன் பெருகுகின்றதில்லையென்றும், கற்றவர்தொகை மற்ற நாடுகளினும் குறைந்த தென்றும், பாடசாலைகள் ஊர்தோறும் தெருக்கள்தோறும் பலப்பலவாகப் பெருகி இருபால் மக்களில் ஒருவரும் எஞ்சாது அவைகளில் படித்தாலன்றி நமக்கு நற்கதி நேராதென்றும் விளம்புகின்ற வீண் வார்த்தைகளே மனிதரை நேர்வழியினின்று விலக்கிவிடும் பழியைப் பெரிதும் பெற்றிருக்கின்றன. பாடசாலைப் பெருக்கத்தை வற்புறுத்துவோர் எல்லோரும் தம்மைக் கற்றவர்களாகவே கருதி விவகரிக்கின்றனரென்பதில் ஐயமில்லை. ஆனால் தாம் கற்றதால் பெற்ற பயன் யாதென எள்ளளவேனும் அவர் சிந்தித்ததுண்டோ யென்னும் ஐயம் எம்மை இடைவிட்டகலாதிருந்து உறுத்துகின்றது. கடவுளை அடைவிக்கும் நெறிக்கண் கொண்டு உய்க்கின்றவரையில் கற்றதால் உற்றபயினில் ஓரளவும் யாவரும் கண்டவராகாரென்பது தமிழ்மறையின் திருவாக்கு. வாழ்க வள்ளுவர். இது வல்லால் வேறு பயனுமில்லை. இவ்வுறுதியை உட்கொள்ளா வுரையெல்லாம் ஊத்தைவாய் அங்காத்தல். எனின் இப்பயனை எதிர்நோக்கிப் பாடசாலைகளை நிறுவவேண்டுமென இயம்புவார் தாம் எத்தனைபேர்? இயம்பினும் கேட்கும் செவி மாந்தர் கணக்கில் ஒன்றிரண்டேனும் உண்டோ! கல்வியின் பெருமையைக் கழறுவோரெல்லாம் காசின் கணக்கையே காட்டியளக்கின்றனர். கல்வித்துறையில் ஈடுபட்டு மிகஉழைக்கின்ற நண்பர் ஒருவரிருவரேனும் நம்முடைய வாசகர்களுக்குத் தெரிந்தவர்க ளிடையேயிருக்கலாம். அன்னவரையணுகி, "ஐய, ஆரம்பப் பாடசாலையென்றும் நடுத்தர உயர்தரக் கல்விக்கென்றும் ஆரவாரம் செய்கின்றீரே? யாது நின் கருத்து! நீவிரும்பு மிப்பாடசாலைகளில் பயின்று தேர்ந்த மக்கள் எத்தகையினர் ஆகவேண்டுமென்று எதிர்நோக்குகின்றாய்! நீ அளிக்கப்புகும் பாடங்களைப் பயின்றவர் பெறுமாறு நிற்கும் பயன் யாது? அஃதில்லாக்கால் எவ்வகையில் அவர் எஞ்சினவர்கள் ஆகின்றார். வாய்வந்தன வழங்கிக் குழம்பாமல் கூரியசொற்களால் நீர் குறித்தபொருள் கூறுதி"யென வினவி, அவர் தரும் விடைகளை உட்கொண்டு ஆய்ந்தக்கால் எம்முடைய கருத்தினது நேர்மை சோதித்தபடியாகும். படிப்புக்குறைவினுற்றான் நாம் இப்படி மற்றத் தேயங்களைவிடத் தாழ்ந்தநிலையில் இருக்கின்றோம் என்பார் சிலர். எழுதப்படிக்கத் தெரியாமல் என் செய்வது; கடிதம் வந்தாலும் அதனை வாசிக்க அண்டைவீட்டுக்காரனையோ வேண்டிச் செல்வது யென வினவுவார் சிலர். படித்தால்தான் உயர்ந்த உத்தியோகங்கள் எய்தி எல்லோரும் இன்புற்று வாழலாம் என உரைப்பார் சிலர். அற்றன்று! அற்றன்று!!

உத்தியோகத்துக்கு என்று படித்த படிப்பினால்தான் இப்பொழுது வேலையின்றிப்பலர் திரிகின்றார். எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு பலவிதமான தொழில்களையும் வர்த்தகங்களையும் விருத்திசெய்து அதனால் தாமும் சுகப்பட்டுத் தம் தேயத்தையும் செல்வவளம் சிறந்ததாயாக்குகின்றதன்றோ முறை"யெனப்பசித்திருக்கும் பி. ஏ. க்களைப் பார்த்துப் பரிகசிப்பார் சிலர். ஓட்டுச் சீட்டில் குறியிடுவதற்கும் கல்வி மிகவும் அவசியம் என வற்புறுத்தினார் தற்காலத்தலைவர்களில் ஒருவர். எல்லாரும் படித்திருந்தால் ஒருவருக்கும் நோய் வராது எனச் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். படிப்பதுதான் நாகரிகம் எனச் சிலர் சொல்லினும் சொல்லலாம். ஆனால் எதனைத்தான் நாகரிகம் எனக் கருதி அவர் பேசுகின்றார் என்பதைச் சிறிது நுணுகி ஆராய்ந்தால் அச்சொல்லின் உரிய பொருளாய கண்ணோட்டத்திற்கு மாறாகவே எல்லாம் கழறப் பெறுவதாய் முடியும். இன்னும் சிலர் அன்றன்று வர்த்தமானப் பத்திரிகை ஒவ்வொன்றையும் வாய்வைத்து மெல்வதற்கே எல்லோரும் ஓரளவு கல்வியினை யுடையவர்களாய்இருக்கவேண்டுமென்றுரைப்பதைக்கேட்டுக் கேட்டுச் செவி பல ஓட்டையாயிருக்கும். இத்தகைய வாசகங்களின் சிறுமையையும் பிழைகளையும் பற்றிப் பெரி திங்குப் பேசவேண்டா. ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் பள்ளிக் கூடங்களில் தச்சுவேலை சொல்லித்தருவதால் அங்குச் சனங்கள், உடைந்து போன தங்கள் பெட்டி நாற்காலி முதலியவைகளைத் தாங்களே பழுதுதீர்த்துக்கொள்ளக்கூடிய சுகவாழ்க்கைக் குரியவர்களாகின்றார்களென்று நம் ஜனத்தலைவர் முன்னணியில் நிற்கும் ஒருவர் கல்வியை வியந்தார் என்றால், அதனைக் கேட்ட ஜனங்களும் பாரட்டினார் என்றால், அவர் நாவும் இவர் செவிகளும் கூசாமை கண்டு நாணுகின்றது எமது உள்ளம்.

கல்வியைப்பற்றி உரைக்கும் உயர்மொழிகள் பல இருப்பினும் அன்னார் நோக்கங்களின் தரம் பார்க்கும் கட்டளைக்கற்களாய் அமைவன இடையிடையே வரும் இவ்வாசகங்களும் இவ்வினத்த பிறவுமாம். ஆதலின், முன் ஓரிடத்தில் யாம் உரைத்தபடி ஆன்மாவென்றும் அகத்தூய்மையென்றும் தியாகமென்றும் தன்னம்பிக்கையென்றும் வழங்கப்பெறும் சிற்சில வாசகங்களை, பெரும்பாலும் கோளரித்தோல் போர்த்திய கர்த்தபங்கள் என்றே கருதவேண்டியிருக்கின்றது. இன்னொரு சாராரும் இருக்கின்றனர். கல்வியின் தத்துவத்தைக் கருதியுரைப்பதாய் எண்ணிக் கொள்ளும் அவர், பிள்ளைகளுக்குள்ளே ஓர் சக்தி அடங்கியிருப்பதாகவும் அச்சக்தியை மெல்ல மெல்ல வெளிப்படுத்தி மலரவைப்பதே கல்வியின் காரியமென்றும் அப்படி மலரவைத்தால் ஆடு போனவழி ஆடு எனும்பண்டைப் பழக்கவழக்கத் தொடர்ச்சியை பிய்த்தெறிந்து புதிய புதிய துறைகளில் தம் புத்தியைச்செலுத்தி எல்லோரும் மேன்மை யடைவார்களென்றும்ஏதேதோ பேசுவார். ஆனால்மலர்ந்த அச்சக்தியின் மணமும் நிறமும் எவ்வகையிருத்தல் வேண்டுமென்று யாரும் வருணிக்கக் கேட்டிலம். பாடங்களை நெட்டுருச் செய்யவைத்தும் வீணான விடயங்களைப் போதித்தும் அன்னியபாஷையை அதிகமாய்ச்சுமத்தியும் பிள்ளைகளின் உயிரைப் பிழிந்துவிடும் இக்காலக் கல்விமுறை அவர்கள் வாயால் பழிப்புண்கின்றது. இம்முறைக்கு யாம் பரிந்து பேசவில்லையாயினும் அவ்வாறு பழிப்பவர் நிறுவவேண்டுமென வாதிக்கும் முறையின் பயன் யாவதாயிருத்தல் வேண்டுமென அவர் அறிவு கொள்ளாமைக்கே இரங்குகின்றோம்.

இன்னணம் பாடசாலைகளின் நோக்கத்தையும் அவைகளில் நிகழவேண்டிய முறைகளைப் பற்றியும் உரைக்கப்பெறுகின்ற சொற்களின் இனம் இவ்வகைத்தென்று இயம்புதல் இயலுமேயன்றி அவையனைத்தையும் இங்கு வகுத்துரைத்தல் ஆவதொன்றன்று. மற்று, இவையனைய கோட்பாடுகளைக் கடந்து கடவுளின்பால் கைகாட்டி அழைக்கவல்ல பாடசாலைகளை நமக்குவேண்டுமென வற்புறுத்துபவர் இக்கால ஜனத்தலைவர்களுள் எவரேனும் இருப்பாராயின், நன்று; அவர் விலாசம் எமக்குத் தெரிதல் வேண்டும்.

இதனைத்தான் கல்வித்துறையில் நாணமில் நிலையெனக் கருதுகின்றோம். பகர்கின்றவார்த்தைகள்தான் எதுவேயாயினும் அந்தத்தில் தொழுதுண்டு பின்செல்வதற்காகவே தீர்கின்ற இப்படிப்பைப் பாராட்டும் பரிபவத்தை உணராமல் வயிற்றிற்கு வாயாட்டப் பயில்கின்ற பாடசாலைகளை நினைக்குந்தோறும் நல்லவர் உள்ளம் நடுக்குறாமல், சந்தைக் கூட்டத்தைக் கோயிற் றிருவிழா வென்று கருதி விவகரிக்கும் வகைகளுக்கு இணங்குகின்ற விபரீதங்கள் விளைந்துதழைக்கின்றன. ஓதுவிப்போர் அனைவரும் காசின் ஆசையால் கல்வியைக் கைகூப்பித் தொழுகின்றார்களே யல்லது கருத்துமுற்றக் கலையொன்றும் இப் பாடசாலைகளில் விலையாவதில்லை. அதுதான் எவ்வாறு இயலும். தாங்களே கற்பிக்கச் சோம்புகின்றதாலன்றோ பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குப் போக்குகின்றனர். அங்குப் போதிக்கும் உபாத்தியாயர்களில் பெரும்பகுதியோர் எத்திறத்தவர் என்பதை அறியாதவர் மிகச்சிலர். ஏனைய தொழில்களில் அமர்ந்துள்ள மாந்தர்களைக்காட்டிலும் அவர் இழிந்தவர்கள் என இயம்ப யாம் இசையேமாயினும், குணம் கல்வி ஒழுக்கம் முதலியவைகளால் அவர் எள்ளளவேனும் உயர்ந்தவர்களென்று எண்ணுதற்கோ இடமில்லை. பொய்யர் திருடர் குடியர் சூதர் காமக்குரோதாதிகளில் கட்டுண்ட கயவர் இக்காலப் பாடசாலை உபாத்தியாயர் இனத்தில் எத்தனையோ பலர் இருக்கின்றார்களென்பது எல்லாருக்கும் தெரியுமே. ஆயினும் கற்றவர்களாய்த் தம்மைக் கருதிக்கொள்ளும் பல பெற்றோர்கள் இதனை அறிந்திருந்தும் தம்முடைய அருமைப் பிள்ளைகளை இத்தகைய உபாத்தியாயர்களிடம் அனுப்புவது ஏனென்று எண்ணுங்கால் அதன் இழிதகைமை புலப்படும். "அனுப்பாது என் செய்வது, எனக்கு நேரமில்லையே" என்பா ரவர். இது ஒரு வார்த்தையோ. தன் பிள்ளையை வளர்க்க நேரமில்லை யென்று கொலைக்களத்துக்குக் கொண்டுய்த்தல் தந்தைக்குப் போதுமோதான். இனி அந்நேரமில்லாமைதான் உண்மையோ வென்றால் அதுவும் பெரும்பாலும் பொய்யே. காலையில் எழுந்து நெடிதுநேரம் வர்த்தமானப் பத்திரிகைகளை வாசிப்பதாகப் பாவனைசெய்வதும் பிறகு இரண்டொரு சினேகிதர்களைச் சந்தித்து இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் உள்ள சம்பந்தம்முதல் குப்பைக்காரர் சங்கத் தீர்மானங்கள்வரையில் வீண்வம்பு பேசிக்கிடப்பதும்,மத்தியானத்தில் உத்தியோகங்கள் என்று உழல்வதும், மாலையில் "கிளப்பு" களுக்குச் சென்று களியாட்டம் கொள்வதும், புரிந்துபுரிந்து பெரும் பெரும் காரியங்கள் சாதிப்பதாகச் சிந்தித்தனராய்த் தமக்கு நேரமில்லையென்று பிள்ளைகளைப் பெருமைக்கிலக்காகாப் பள்ளிக்கூடங்களுக்குப் போக்குவார் மதியை என் சொலி முடிப்பதென்று அறிகிலேம். "நேரமிருந்து நான் போதித்தாலும் என்ன பயன். சர்வகலாசாலைப் பட்டம் பெற்றால்தான் அன்றோ என் பிள்ளை பணம் சம்பாதிக்க இயலும். ஆதலின் உபாத்தியாயர்களும் அவர் கற்பிக்கும் முறைகளும் எவ்வகை இருந்தபோதிலும் என் பிள்ளையைப் பள்ளிக்கே அனுப்பித் தீரவேண்டியிருக்கின்றது. இன்றியமையாத் தீமைகளில் இதுவும் ஒன்று" என்பாரும் உளர். காகம் மேகத்தைக் கரிதென்பது போலாம் இது. கடவுளைக் கடைவாயில் நிறுத்திவிட்டுத் தன் பிள்ளையைப் பணத்தின்பொருட்டுப் படிக்கவைக்கும் பெற்றோர் தாம் பெரிது உத்தமராதல் உண்டோ?



# குறுந்தொகை

[746-வது பக்கத் தொடர்ச்சி]

கச்சிப்பேட்டு நன்னாகையார்] 197 [முல்லை

குறித்த கார்காலம் கடந்தும் வாராத தலைமகனை நினைந்து ஆற்றாது வருந்திய கிழத்தி தன்னை வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

யாதுசெய் வாங்கொல், தோழி? நோதக
நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை
ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதி ருருவிற் கூற்றம்
காதலர்ப் பிரிந்தவெற் குறித்து வருமே.

(உரை). நாம் வருந்தும்படி, நீருடன் (மின்னல், இடி முதலிய) கருவிகளையுங்கொண்டு தோன்றிய கார்காலத்திலே கிளைத்தெழும் மழையோடு கூடிய காற்றின் குளிர்ச்சியால் காதலரைப் பிரிந்து (ஏற்கனவே) அறிவிழந்து மயங்கிய எனது உயிரை அடியோடுவாங்கக் கருதி யமன் கூதிரின் வடிவமாய் வாராநின்றான். தோழீ, இனி நாம் யாது செய்வாம்?

நீர் எதிர் - எதிர்தல் - தோன்றுதல். கார் எதிர் - எதிர், ஏழாம் வேற்றுமை உருபு. குளிரொடு - குளிரால் (உருபு மயக்கம்). எற்குறித்து - என்னைக் கொல்லக்கருதி; எனதுயிரைக் கொள்ளக் கருதி. 'கூற்றம், எற்குறித்து, கூதிருருவின் வரும்; யாது செய்வாங்கொல்?' எனக் கூட்டி முடிக்க. 'பேதுற்றுக் காதலர்ப் பிரிந்த' என்பதை 'காதலர்ப் பிரிந்து பேதுற்ற' என மாற்றிக்கொள்க. கூதிர் - மழைக்காலமாகிய கார்ப்பருவத்திற்கடுத்த குளிர்காற்றோடு கூடிய பருவம்; ஐப்பசி கார்த்திகையாகிய 'சரத்ருது'.

---

கபிலர்] 198 [குறிஞ்சி

இரவுக்குறி வாராநின்ற தலைமகனுக்குத் தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.

மாஅங் கொன்ற மரஞ்சுட் டியவில்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன, பால்வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோட் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறும்; அடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க, தில்ல; வருகுவள் யாயே.

(உரை). மாமரம் முதலிய மரங்களை வெட்டிக் கொளுத்திய மலையிடத்துப் புனங்களில் கரும்பென்று மயங்கத்தக்கப் பசிய தாளையுடைய செந்தினையின், இளம்பெண்யானையின் துதிக்கையைப் போலப் பருத்து நீண்டதும், பக்கத்திலேயுள்ள நீண்டு கரிந்த மரத்துண்டுகளின் மீது சாய்ந்ததுமான நெருங்கிய தானியங்களையுடைய பொன்னிறம் பொருந்திய கதிர்களில் வந்து விழும் கிளிகளைக் கடிதற்பொருட்டு நாங்கள் செல்வோம். கொல்லும் போர்வேல் விளங்கும் விசாலமான கையையுடைய 'மலையன்' என்பவனது காட்டிலுள்ள சந்தனம் கமழும் மார்போடு இனி இங்கு வாராதே; அன்னை வந்து விடுவாள்; (நில்லாது போதி.)

சுட்டியவு - (விகாரம்) சுட்ட இயவு. பால்-பக்கம். வார்பு- நீண்டு. கரிக்குறடு - கரியாகிய மரத்துண்டு. இறைஞ்சிய - தலையைச் சாய்த்த. கோள் - காய், தானியம்; grains of corn. குரல் - கதிர். சேறும் - செல்தும். 'மலையன் - கடையெழு வள்ளல் எழுவரில் ஒருவன்; 'காரி' என்னும் பெயரும் இவனுக்குண்டு. இதனை

காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையன்-(158)

என்னும் புறப்பாட்டான் அறிக. இவனுடைய கானம் 'முள்ளூர்க் கானம்' ஆரம் - சந்தனம். தில்ல - அசைச் சொல்.

'நாங்கள் தினைப்புனக் காவற்குச் செல்வோம்;இனி இங்கு நீவாரற்க, அங்கு வருக' என்று குறிப்பித்தவாறும்.

---

பரணர்] 199 [குறிஞ்சி

தலைமகள் இற்செறிப்புறுவதைத் தோழி தனக்கு உணர்த்தக்கேட்ட தலைமகன் தனது நெஞ்சொடு கிளத்தியது.

பெறுவ தியையா தாயினும் உறுவதொன்
றுண்டுமன், வாழிய நெஞ்சே; திண்டேர்க்
கைவள வோரிக் கானந் தீண்டி
எறிவளி கமழு நெறிபடு கூந்தல்
மையீ ரோதி மாஅ யோள்வயின்
இன்றை யன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறினே.

(உரை). இனி அவளை யான் கூடுவது இயையாதாயினும், நெஞ்சே, நாம் செய்யத்தக்கது ஒன்றுண்டு. திண்ணிய தேரையும் கொடையிற் சிறந்த கைவண்மையையும் உடைய 'ஓரி' என்பவனது கானத்திலுள்ள பூக்களைத் தீண்டி அவற்றின் மணத்தையேற்றுவீசுங்காற்றும் (முன்னையினும் மணமிக்கு) கமழ்வதற்குக் காரணமான நெறித்த கூந்தலையும் கரிய தைலப்பசையோடு கூடிய முன்னமயிரையுமுடைய மாமைநிறத்தினளாகிய தலைமகளிடத்து இன்று நாம் நுகர்ந்த இன்பத்தையொத்த இன்பத்தையே எக்காலும் நினைக்கும்படி செய்யுங் காதல்நோய் இறுதி என்பதொன்று இல்லாமல் என்னைப் பீடித்துத் துறக்கநாட்டிலேனும் இவளுடன் என்றும் நிலைத்துவாழ்தலை நான் பெறும்படி செய்யுமாயின்.

ஈர் - ஈரம்; தைலப்பசை. இறுமுறை - முடிவு பெறுதல்; இறுதி. பெறின் - பெறுவிப்பின், தரின்.

---

ஔவையார்] 200 [முல்லை

கார்ப்பருவம் வந்தும் குறித்தபடி தலைவன் வாராமையால் ஆற்றாளாகிய தலைவி, 'அது பருவம் அன்று, வம்பு' எனச் சொல்லித் தன்னைத் தேற்றிய தோழிக்கு உரைத்தது.

பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
மீமிசைச் சிரமிசைத் தாஅய் வீசுமந்
திழிதரும் புனலும் வாரார், தோழி;
மறந்தோர் மன்ற; மறவாம் நாமே;
கால மாரி மாலை மாமழை
இன்னிசை யுருமின் குரலும்
முன்வர லேமஞ் செய்தகன் றோரே.

(உரை). மழை பெய்த குன்றிடத்துப் பூமணம் நாறும் குளிர்ந்த மழை, மேலுயர்ந்த சிகரத்தின் மீது தாவி பூக்களை வாரிக்கொண்டு கீழே இறங்கும் புனற்காலத்திலும் வாரார், தோழி, இனிய ஓசையையுடைய இடியின் குரலும் தன் செவியிற்படாதபடி காவலைச்செய்து பிரிந்தவராகிய தலைவர்; அவர் மாரிக்காலத்தில் மாலைப்பொழுதில் கட்டாயம் வருவதாகச் சூளுரைத்துச் சொல்லிய அருமறையை நிச்சயமாக மறந்துவிட்டார். நாமோ அதனை மறவோம்.

கலுழ் - கலங்கிய மழைச்சலம். சிரம் - சிகரம், உச்சி. புனல் - (ஆகுபெயர்) புனற்காலம், மழைக்காலம். மறந்தோர் - மறந்தார். மறை - வேதம், அதைப்போலப் பொய்யாத சூள். இடியின் குரலைக்கேட்டால் அதனால் கார்கால

வருகையை அறிந்து, அக்காலத்திற் பிரிவால் தான் படும் அவத்தையை உணர்ந்து விரைந்து அவர் மீண்டிருப்பார். தம்மையும் மறந்து, வரும் எண்ணத்தையும் தவிர்ந்துவிட்ட படியால் அவ்விடியின் குரலைத் தான் கேளாதவாறு சேமமேதோ செய்துகொண்டு அவர் அகன்றிருத்தல் வேண்டும் என்னுங் கருத்தால், 'உருமின் குரலும் முன்வரல் எமஞ் செய்து அகன்றோர்' என்றாள் என்க.

---

201

[குறிஞ்சி]

கடிமணக்காலத்து மணமனைபுக்குத் தலைமகளையுற்று, 'நீ நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்கு அவள் உரைத்தது.

அமிழ்த முண்கநம் மயிலிய லாட்டி;
பால்கலப் பன்ன தேக்கொக் கருந்துபு
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி, அயலது
முள்ளி லம்பணை மூங்கிலிற் றூங்கும்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே.

(உரை). பால் கலந்தாற்போல இனிய சாறு பொதிந்த மாம்பழத்தை அருந்தி, நீலநிறம் பொருந்திய மென்மையான சிறகையும் கூர்மையான மூக்கையுமுடைய குயிற் பறவை நெல்லியின் புளிக்கும் பழத்தையும் உண்டு, பக்கத்திலுள்ள முட்களையுடைய அழகிய மூங்கிலிடத்துத் துயிலும் மூங்கில்கள் வளர்ந்து மேலெழுந்த சோலைகள் பொருந்திய மலைகளையுடைய குறிஞ்சிக்கோமான் (தவறாமல்) வந்து என்னை வதுவையாற்றிக் கொள்வான் என்று சொல்லிய மயில்போன்ற சாயலையுடைய என்தோழி துறக்கநாடெய்தி அங்கே அமிழ்தத்தை உண்பாளாக.

'அமிழ்தம் உண்க நம் மயிலியலாட்டி' என்றது முன்னிலைப் புறமொழி. 'அயலிலாட்டி' என்றும் பாடம். தேக்கொக்கு - தேன் கொக்கு; தேன் - இனிய ரஸம். கொக்கு - மா, மாம்பழம் (ஆகுபெயர்). புளி - (ஆகுபெயர்) புளிஞ் சுவையை உடைய பழம். பணை மூங்கில் - பணையாகிய மூங்கில் (பண்புத்தொகை); பணைத்த மூங்கில் (வினைத்தொகை) என்றுமாம். கழை - மூங்கில். நாடனை வரும் - நாடன் வரும்; ஐ, சாரியை.

இறைச்சி:—இனிய மாம்பழத்தை அருந்திய குயில்புளிப்பான நெல்லிக்காயையும் உண்டு பிறகு மூங்கிலிடத்துத் துயிலும் நாடன் என்றமையால் அவனும் அத்தகையனாய்த் தன்னை மறந்து அகன்றானென்று ஐயுற்றுத்தலைமகள்வருந்த அப்பெற்றியன் அல்லன் அவனென்றும், தவறாமல் வந்து வரைந்து கொள்வானென்றும் தேற்றிய தோழியின் வார்த்தை பலித்ததை அவள் பாராட்டியதாம்.

---

அள்ளூர் நன்முல்லையார்] 202 [மருதம்

பரத்தையிற் பிரிந்து மீளலுற்ற தலைவனுக்கு வாயில் நேர்ந்து தன்னைத் தெருட்டிய தோழிக்குத் தலைவி வாயில் மறுத்துக் கூறியது.

நோமென் னெஞ்சே, நோமென் னெஞ்சே;
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
இன்னா செய்தல் நோமென் னெஞ்சே.

(உரை). புன்செய் நிலத்தில் நெருங்கி வளரும் சிறிய இலைகளையுடைய நெருஞ்சியின் கண்ணுக்கினிய புதியபூ முள்ளைப் புறத்தெற்குமுடைய பழத்தை ஈன்றாற்போல (முன்பு களவொழுக்கக் காலத்தில்) இனிமையான தண்ணளிபுரிந்து அன்பைக் காட்டிய நமது காதலர் (இப்பொழுது) நமக்குத் துன்பத்தைத் தருவதான செயல்களைச்செய்தலை நினைத்து, எனது மனம் மிகவும் வருந்துகின்றது; உண்மையாக மிகவும் வருந்துகின்றது.

* நோம் - நோகும். அமன்ற - நெருங்கிவளர்ந்த; 'அமல்' பகுதி. கட்குஇன் - கண்ணுக்கு இனிய. முள்- (ஆகுபெயர்) முள்ளையுடைய பழம். செய்தல் நோம் - செய்தலைக்குறித்து நோம்.

---

நெடும்பல்லியத்தனார்] 203 [மருதம்

(இதுவும் அது)

மலையிடை யிட்ட நாட்டரு'ம் அல்லர்;
மரந்தலைத் தோன்றா ஊரரும் அல்லர்;
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து
கடவு ணண்ணிய பாலோர் போல
வெரீஇ யொழுகு மென்னைக்குப்
பரியலேன் மன்யான் பண்டொரு காலே.

(உரை). தலைவர் மலைகள் குறுக்கிட்ட தூரதேசத்தினரும் அல்லர்; மரங்கள் தன்னிடத்து வளராத சுரத்திடைப்பட்ட ஊரினரும் அல்லர்; கண்ணிற் காண்பதற்கும் கிட்டுதற்கும் எளிய அணிமைக்கண் இருந்தும், என்னைத் தெய்வமுற்றாரைப்போல அஞ்சி அணுகாது அகன்றொழுகும் என் தலைவனுக்கு, முன்போல இனி ஒருகாலும் நான் இரங்கமாட்டேன்.

தலை - இடம், தன்கண். 'நண்ணுவழி யிருந்து' என்றது ஒரே ஊரிலுள்ள பரத்தையர் சேரிக்கண் அவன் நெடிது தங்கியதைக்குறித்து. கடவுள் நண்ணிய பாலோர் - தெய்வம் ஏறப்பட்டோர்; those possessed by some evil spirit. என்னை - என் + ஐ; ஐ, - தலைவன், இறைவன். பண்டு - பண்டுபோல்.

---

மிளைப்பெருங் கந்தனார்] 204 [குறிஞ்சி

தனதுதவியால் தலைமகளின் கூட்டத்தைப் பெற விரும்பித் தன்னை அடைந்த தலைமகனுக்குப் பாங்கன் கழறியது.

காமம் காமம் என்பர்; காமம்
அணங்கும் பிணியு மன்றே; நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புனம்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம், பெருந்தோ ளோயே.

(உரை). காமம், காமம் என்று யாவரும் இகழ்ந்துரைப்பர்; அத்தகைய காமம் தீண்டிவருத்தும் தெய்வமுமன்று, நோயுமன்று; பருத்த தோளையுடைய நண்ப, ஆய்ந்து நோக்கின் அது. காமம் உழுது பண்பட்ட பழம் புனமாகிய மேட்டு நிலத்துத்தழைத்த இளம்பயிரை முதிர்ந்த பசுத் தடவிமேய்ந்தாற்போல, நல்லவிருந்தே ஆகும்.

சுவல்- மேட்டுநிலம்; 'வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ் சுவல்' என்பது புறம் (120.) புனம் - (ஆகுபெயர்) புனத்துப்பயிர். மூதா - முதிய ஆ. தைவருதல்-தடவுதல், இங்கு மேய்தல். இவரே பாடிய கீழ் 136வது செய்யுளிலும் இத் தொடரே வந்திருத்தல் காண்க.

---

உலோச்சனார்] 205 [நெய்தல்

வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவுக்கு ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் தனதாற்றுமை புலப்படக் கூறியது.

மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாஅங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்



கலங்குகடற் றிவலை ஆழி நனைப்ப
இனிச்சென் றனனே இடுமணற் சேர்ப்பன்;
யாங்கறிந் தன்றுகொல், தோழி, என்
தேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே.

(உரை). மின்னுதலைச் செய்கின்ற மின்னல், இடி முதலிய கருவிகளை உடையமழை பெய்தல் நிலைத்துத் தங்கலால் விசும்பிற் பறக்கும் அன்னம் சிறையை விரித்தெழுந்தாற் போலப் பொன்னாலாகிய படைக்கலங்களாற் பொலிவுற்ற வெண்மையான தேரிலேறி, தேர்க்கால்களைக் கலங்கும் கடலின் நீர்த்திவலைகள் நனைக்குமாறு இப்பொழுதுதான் சென்றார், மணல் செறிந்த நெய்தனிலத் தலைவரான எனது காதலர்; உடனே நறுமணங் கமழும் எனது அழகிய நுதலிடத்துப் பரந்ததுபசலை. அவர் பிரிந்ததை அப்பசலை யாங்ஙனம் அறிந்ததோ யான் தேர்கிலேன்.

மின்னு - மின்னுதல் (தொழிற்பெயர்). பறை - சிறகு. இனி - இப்பொழுது. அறிந்தன்று - அறிந்தது.

உவக்காணெங் காதலர் செல்வார்; இவக்காணென்
மேனி பசப்பூர் வது

என்ற திருக்குறளில் அமைந்துள்ள கருத்தும் இதுவே.

---

ஐயூர் முடவனார்] 206 [குறிஞ்சி

காமத்தால் வருந்தல் கற்றறிவாளர்க்கு அழகன்றென்று தன்னைக் கழறிய பாங்கனுக்குத் தலைமகன் எதிர்மறுத்துச் சொல்லியது.

அமிழ்தத் தன்ன அந்தீங் கிளவி;
அன்ன வினியோள் குன்றம் இன்ன
இன்னா வரும்படர் செய்யு மாயின்,
உடனுறை வரிதே காமம்;
குறுக லோம்புமின் அறிவுடை யோரே.

(உரை). அச்சிறுமகளின் அழகிய இனிய சொற்கள் அமிர்தத்தைப் போல்வன. அத்துணை இனியவள் வாழும் குன்றம் எனக்கு இவ்வளவு இன்னாத அரிய துயரத்தை உண்டாக்குமாயின் (தணியாத) காமத்துடனிருந்து உயிர் தரித்து வாழ்தல் அரிது. ஆதலின் அறிவுடையோராகிய நீர் அவ்விடத்து அணுகுதலைத் தவிர்ந்தொழியும்.(ஒழியாது சென்று அவளைக் கண்ணுறுவீராயின் உமது நிலையும் எனது நிலையைப்போல் ஆய்விடும்.)

'அறிவுடையோரே' என்று பாங்கனை விளித்தது இகழ்ச்சிக் குறிப்பு.

---

உறையனார்] 207 [பாலை

தலைமகனது செலவுக் குறிப்பை அறிந்தும் அறியாள் போன்று 'அவர் பிரிந்து செல்லார்' என்று சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை யங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
சுரஞ்செல் மாக்கட் குயவுத்துணை யாகுங்
கல்வரை யல்லது தோல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொரிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் மார்வலர் பலரே.

(உரை). காதலிக்கு அறிவித்துச் செல்வதென்றால் செல்லுதல் இல்லையாகும் என்றெண்ணி, காட்டுவழியிலுள்ள வாகை மரக்கிளையிலிருந்த துணையினீங்கிய பருந்தின் வருத்தத்தைப் புலப்படுத்தும் தெளிவான கூவுதல் சுரத்தினிடையே செல்லுஞ் சனங்களுக்குப் பேச்சுத்துணையாகப் பொருந்தும் கற்செறிந்த மலைவழியிலும்,அன்றி யானைகள் சஞ்சரிக்கும் சிறு வழியிலும், வெப்பம் நல்ல பாதங்களைப் பொரிந்து போம்படி செய்ய, அதனால் தாவித் தாவிக் காதலர் சென்றனரென்று கண்டோர் சொல்லக்கேட்ட நம்மன்பர் பலராவர். (நீ இனி அதை மறைக்காதே.)

அரிது - அருமை, இன்மை. தோல் - யானை. பொரிப்ப - பொரியும்படி, கொப்புளிக்கும்படி செய்ய. தாஅய் - தாய், தாவித்தாவி, தாண்டித் தாண்டி. சென்றெனெ - (விகாரம்) சென்ற என. ஆர்வலர் - அன்பர், நண்பர்.

---

கபிலர்] 208 [குறிஞ்சி

தலைமகனது வரைவிடைப் பிரிவின்கண் ஆற்றியிருத்தல் வேண்டுமென்று தன்னை வற்புறுத்திய தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

ஒன்றே னல்லேன், ஒன்றுவென்; குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன், தோழி, என்றநின் னானே.

(உரை). குன்றினிடத்துப் பொருதகளிறு மிதித்தலால் நெரிந்து சாய்ந்த தாளையுடைய வேங்கைமரம் குறப்பெண்கள் தமது கூந்தலிற் சூடுவதற்குத் தரையில் நின்றே மலர்களைப் பறிக்கும்படி தாழ்ந்து பூக்கும் குறிஞ்சி நாடனாகிய தலைமகனுடன் நான் பொருந்துகின்றிலேன் என்று நீசொல்வதினால், நான் பொருந்தேன் அல்லேன், இனிப் பொருந்துகின்றேன்.

பெய்ம்மார் - பெய்வதற்கு, சூட்டுவதற்கு. நின்று - மரத்தின்மேலேறாது கீழே நின்றே. கொய் - கொய்ய. இசின் - அசைச்சொல்.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 209 [பாலை

பொருள்முற்றி மீண்ட தலைமகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது.

சுரந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கறங்கும்
இறப்பருங் குன்றம் இறந்த யாமே,
குறுநடைப் பல்லுள் ளலமே, நெறிமுதற்
களரிற் கலித்த முடச்சினை வெட்சித்
தளையவிழ் பல்போது கமழும்
மையிருங் கூந்தல் மடந்தை நட்பே.

(உரை). சுரத்தினிடை வளர்ந்த நெல்லியின் பசுங்காய் கொலைவல்ல புலி தன் குட்டியுடன் துயில்கொள்ளும் புதரில் விழுந்து ஒலிக்கும் கடத்தற்கரிய குன்றுகளைக் கடந்து சென்ற யாம், தளர்ந்த நடையையும், (மினிர்ந்த) பல்லினையும், களர்நிலத்தில் தழைத்தெழுந்த முள்ளார்ந்த கிளைகளையுடைய வெட்சியின் முறுக்கவிழ்ந்த பூக்கள் பலவும் மணங்கமழும் கடைகுழன்று நெறிந்த மிகக் கரிய கூந்தலையும் உடைய மடந்தையின் நட்பை நினையாதிருந்தோமோ ? இல்லை.

சுரந்தலை - (விகாரம்) சுரத்தலை - சுரத்தின்கண். இறப்பரும் - இறப்பு - கடத்தல். உள்ளலமே - உள்ளவில்லையா, நினைக்கவில்லையா? ஏகாரம் எதிர்மறை. 'நெறிமுதல்' என்பதைக் கூந்தலுக்கு விசேடணமாக்குக. மையிரும், மை - கருமை ; இருமை - கருமை; மிகக்கரிய என்றபடி; மைபோற் கரிய என்றுமாம்.

'நடை, ல், கூந்தல், மடந்தை நண்பை உள்ளலமே' எனக் கூட்டுக.

---

காக்கைபாடினியார் நச்சேள்ளையார் } 210 { முல்லை

பிரிந்து மீண்ட தலைமகன் 'இதுகாறும் நீ எவ்வாறு தலைமகளை ஆற்றுவித்திருந்தாய்?' என்றாற்குத் தோழி சொல்லியது.

திண்டேர் நள்ளிக் கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினும் சிறிது,என் தோழி,
பெருந்தோ ணெகிழ்த்த செல்வற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

(உரை). எனது தோழியாகிய தலைமகளின் தோள்களை (தமது பிரிவால்) மெலிவித்த செல்வரை விருந்தினராக விரைவின்வருமாறு கூவியழைத்த காக்கைக்கு,வலியதேரை யுடைய 'நள்ளி' என்பவனது கானத்தில் வாழும் இடையர்களின் பசுக்கள்பலவுந்தந்த நெய்யை வார்த்துப் பிசைந்த 'தொண்டி' யென்னும் ஊர் முழுதும் ஒருங்கு விளைந்த விரும்பப்படும் வெண்ணெல்லின் சோற்றை ஒரு பொற் கலத்திலேந்திப் பலியாகக் கொடுப்பினும் அது (அக்காக்கை செய்த பேருதவிக்கு) சிறிய கைம்மாறே ஆகும்.

நள்ளி - கடையெழு வள்ளல் எழுவரில் ஒருவன். அவர் இன்னாரென்பதையும், இத்தகைய ஈகையினர் என்பதையும் புறம் 158-ம் பாட்டாலும், பத்துப் பாட்டிற் சிறுபாணாற்றுப்படையின் 84—122-ம் அடிகளாலும் அறிக. வெம்சோறு - வெம்மை, விருப்பம். செல்வற்கு - செல்வனை (உருபு மயக்கம்). விருந்துவர-விருந்தாக வர: 'விரைந்து வர' என்றும் பாடம்.

'காக்கை கரைதலைப்' பாடியதால் இவருக்கு இப்பெயர் வந்தது போலும். பலி - உணவு; பெரும்பாலுந் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவையே குறிக்கும்.

---

காவன் முல்லைப்பூதனார்] 211 [பாலை

'பொருள்வயிற் பிரிந்த தலைவர் இடைச்சுரத்தின்கண் கவலுவனகண்டு நாம் ஆற்றேமென நினைந்து மீள்வர்கொல்' என்று கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லியது.

அஞ்சி லோதி; ஆய்வளை நெகிழ
நேர்ந்து மருளார் நீத்தோர்க் கஞ்சல்
எஞ்சினம், வாழி தோழி; எஞ்சா
தீய்ந்த மராஅத் தோங்கல் வெஞ்சினை
வேனி லோரிணர் தேனோ டூதி
ஆராது பெயருந் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே.

(உரை). அழகிய சிலவாகிய கூந்தலை உடையவளாகிய தோழி, ஆய்ந்தணிந்த வளையல்களை நழுவும்படி செய்து, நம்மை விட்டகன்று சிறிது பாகமும் ஒழியாது தீய்ந்து போன மராமரத்தின் உயர்ந்த கிளையில் வேனிற்காலத்தில் மலரும் ஒரு பூங்கொத்தைத் தேனுடன் உண்டு பசி தீராது வண்டு மீளும் நீரற்ற நிலமாகிய சுரத்தை, மனங்கலங்காதவராய்க் கடந்தவரைக் குறித்து நான் அஞ்சுதலொழிந்தேன். (நீ இனிக் கவலற்க.)

அஞ்சிலோதி, தோழி - விளி. நேர்ந்து - இசைந்து, ஒருப்பட்டு. 'நொந்து' என்றும் பாடம். 'மருளார் சுரனிறந் தோர்' என்றுகூட்டி தும்பி பெயர்வதைக் கண்டும் மனங்கலங்கி இரங்காராய் அச்சுரத்தைக் கடந்தவர் என்றுரைக்க. மருளார் முற்றெச்சம். நீரில் - நீரில்லாத, நீர் வறண்ட.

---

நெய்தற் கார்க்கியனார்] 212 [நெய்தல்

தன்னைக் குறையிரந்த தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பிக்கக் கூறியது.

கொண்க னூர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
தெண்கட லடைகரை தெளிமணி யொலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்;
அளிதோ தானே காமம்;
விளிவது மன்ற; நோகோ யானே.

(உரை). கானற் சேர்ப்பன் ஊர்ந்துவந்த கொடிஞ்சியையுடைய நெடுந்தேர் தெளிந்த நீரையுடைய கடற்கரையில் மணிகள் ஒலிக்கும்படி உன்னைக் காணப் பலகால் வந்து, நான் மறுத்தலால் நாணிப்பெயர்ந்தது. அவன் உன்னிடத்துக் கொண்ட காதல் உன்னால் அளிக்கத் தக்கதொன்று அன்று, அழியத்தக்கதே போலும். நான் (செயற்பாலதொன்றுமின்றி) வருந்துகோ?

கொண்கன் - நெய்தனிலத்தலைவன்; 'கணவன்' என்ற பொருளுந் தோன்ற நின்றது. கொடிஞ்சி - தேரினோருறுப்பு; அது தாமரைப்பூ வடிவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடப்படுவது. இதற்குக் 'கூவிரம்' என்றும் பெயர். காண-நான் காண, என்னைக் காண, என்றுமாம். நாண - நாணி; அளிதோ - அளித்தோ; அளித்தன்று; ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

'நான் பலகால்மறுப்பினும் அவர் ஒழியாது வருகின்றார்; நீயோ இணங்குமாறில்லை. நான் இனி மனநொந்து வருந்துவதையன்றி செயற்பாலதென்?' என்று தோழி வருந்திக் கூறியதாம்.

---

கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றனார் } 211 {பாலை

தலைமகன் பிரிவை உணர்ந்து கவன்ற தலைமகளுக்குத் தோழி, 'நமது துயரத்தை நினைந்து அவர் இடைநின்று மீள்வர்' என உரைத்தது.

நசைநன் குடையர், தோழி,ஞே ரோரெனல்,
கவைத்தலை முதுகலை காலி னொற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉப் பெருந்தாதால்
ஒழியி னுண்டு வழியி னெஞ்சித்
தெறித்துநடை மரபிற்றன் மறிக்கு நிழலாகி
நின்றுவெயில் கழிக்கும் என்ப, நம்
இன்றுயில் முனிநர் சென்ற வாறே.

(உரை). நம்முடன்கூடி இனிது துயிலுதலை வெறுத்துச் சென்றவர், நம்மோடு பொருந்தாதவர் என்று சொல்லாதே. அவர் நம்மிடத்து விருப்பம் மிகவும் உடையவரே. அவர் செல்லும்வழியாகிய கானகத்திடைக் கவர்த்த கொம்பையுடைய முதிய ஆண்மான், வழியிலே வலியோய்ந்து பசிப்பிணியால் வருந்திக் காலால் தன்னைத் தீண்டி இறைஞ்சிய துள்ளித்துள்ளி நடக்குந் தன்மையையுற்ற தனது பிணைக்குப் பருத்த பெரிய தாதுமாதுளை இலைகளைத் தந்துண்பித்து அதன் பசி தீரின் அதன்பின் எஞ்சியதைத் தானும் உண்டு, அதற்குத் தங்கும் நிழலாகத் தனது நிழலைத் தந்து நின்று வெயிற்பொழுதைக் கழிக்கும் என்ப. (அதைக் கண்டு நம்மை நினைந்து அவர் மேற்செல்லாது மீள்வர்.)

நேரோர் - நேரார்; பொருந்தாதவர்; அன்பில்லாதவர். கலை - ஆண்மான். பிணிக்கு - பிணியால். தாது - தாதுமாதுளை; இங்கே, அதனிலை. ஒழியின் - பசி தீருமாயின். 'ஒழியின்' என்றது அதன் பசி தீர்தலின் அருமையை நோக்கி. தெறித்து நடை-பசியாலும், தரையின் வெப்பத்தாலும், துள்ளிச்செல்லும் நடை. மறி-பெண்மான். முனிநர் - வெறுத்தவர்.

---

கூடலூர் கிழார்] 214 [குறிஞ்சி

தலைமகளின் வேறுபாட்டைக்கண்டு அதன் உண்மைக் காரணத்தை உணராது அன்னையர் வேலனைக்கொண்டு வெறியாட்டு எடுப்பித்தபோது தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.

மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுர லிறடி காக்கும் புறந்தாழ்
அஞ்சி லோதி அசைஇயற் கொடிச்சி
திருந்திழை யல்குற்குப் பெருந்தழை யுதவி



செயலை முழுமுத லொழிய, அயல
தாலை மாலை சூட்டி
ஏமுற் றன்றிவ் வழுங்க லூரே.

(உரை). மரங்களை வெட்டுங் கானவன் புனத்தைக் கொத்தி விதைத்த (முதிர்ந்து) விளங்குங் கதிர்களையுடைய தினையைக்காக்கும், பின்புறத்திலே தாழ்ந்த அழகிய சிலவாகிய கூந்தலையும் நுடங்கிய இயல்பினையும் உடைய குறமகளின் திருந்திய மேகலையை அணிந்த அல்குலுக்கு உடையாகப் பெருந்தழைகளைத் தந்து அசோகமரம் அடியோடு பாழ்பட, அதற்கயலதான கருப்பம் பூ மாலையை அவ்வாறு தழையுதவியவன் பூணும்படி செய்து இவ்வாரவாரத்தோடு கூடிய ஊர் மகிழாநின்றது.

துளர்ந்து - மண்வெட்டியால் கொத்தி; 'துளர்' என்னும் பெயரடியாகப் பிறந்த வினைச்சொல். துளர் - மண்வெட்டி, கொட்டு; the spade. இறடி - தினை; கருந்தினை. அசைஇயல் - மென்மையான சாயல்; தளர்ந்தநடை என்றுமாம். உடை - தழையுடை. செயலை-அசோகு. ஆலை-கரும்பு கரும்பின்தோகை சூட்டி-தழையை உதவியவனுக்குச்சூட்டி. 'ஆலை மாலை சூட்டி' என்றது, 'அவனை மடலேறுவித்து' என்னுங் குறிப்பில் வந்தது. ஏமுற்றன்று - ஏமுற்றது, மகிழ்ந்தது. அழுங்கல் - ஆரவாரம்; கௌவை.

'இவனிடத்துக் காதலுற்று இவளுக்குப்பலகாலும் அசோகந்தழையைப் பறித்துக்கொடுத்தவன் ஒருவன் உளன். அவனை மடலேறும்படி செய்து, வேலனைக்கொண்டு வெறியாட்டு அயர்வித்து மகிழும் இந்த ஊர்' என்று, தலைமகனுக்குந் தலைமகளுக்கும் உள்ளநேயத்தொடர்பை அவர்களுக்குத் தோழி குறிப்பித்தவாறாம்.

---

மதுரைஅளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் } 215 {பாலை

தலைமகனது பிரிவின்கண் ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னை வற்புறுத்தித் தேற்றிய தோழிக்குச் சொல்லியது.

படரும் பைப்பயப் பெயரும்; சுடரும்
என்றூழ் மாமலை மறையு மின்றவர்
வருவர்கொல், வாழி தோழி; நீரில்
வறுங்கயந் துழைஇய இலங்குமருப் பியானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி யிரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கிற் கானிறந் தோரே.

(உரை). நீர் வற்றிய வெறுங்குளத்தைக் கையால் துழாவிக் கலக்கிய விளங்குகின்ற மருப்பினையுடைய யானை சிறுமலையின் பக்கத்தில் தான் விரும்பும் பிடியைத்தழுவி, வளைந்த வரிகளையுடைய பெரிய புலியினின்று காக்கும் நீண்ட மலையிடத்துக் காட்டைக் கடந்து சென்றோராகிய தலைவர், ஒளியை வீசும் சூரியன் அத்தகிரியில் மறையும் இம்மாலைப் பொழுதில், நீ சொல்லுகிறபடி நிச்சயமாக வந்திடுவாரா? (வந்திடுவாராயின்) நான் படுந்துயரம் மெல்ல மெல்ல நீங்கிவிடும்.

பைப்பய - பையப்பைய, மெல்ல மெல்ல; இது 'பைபய' என்று ஒற்றிரட்டாமலும வரும். 'பைப்பய நுணுகி' (அகம். 71); 'பையயத்தணந்தனே,' 'பையயவெம்மை', 'பையய... ஆறுக' (ஐங்குறு., 83, 113, 396). என்றூழ் - சூரியன். மாமலை - பெரிய அல்லது கரிய மலை; அத்தகிரி. துழைஇய துழாவிய. அமர் - அமரும், விரும்பும், விரும்பப்படும்.

இறைச்சி:—'யானை தனது துணையைத் தழுவி புலியினின்று காக்குங் கான்' என்ற குறிப்பால், அதனைக் கண்டேனும் பிரிவால் வருந்துந் தன்னைப் பசலை புண்ணுதவாறும் அலர் அடரா வண்ணமுங் காக்குமாறு தலைவர் மீள்வர் என்றதாம்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

### 12. இரத்தினப் பரீட்சை.

[748-வது பக்கத்தொடர்ச்சி]

மாணிக்கங்கள் பன்னிரு குணங்களும் இருபத்தெட்டு வகை நிறங்களும் பெற்று விளங்குமாகையால் தேசங்களுக்கு ஏற்றவாறு பல பெயர்களும் பெறுமென்பதற்கு ஐயுறவில்லை. மாணிக்கங்களின் இருபத்தெட்டுவகை நிறங்களையும் பெரும்பற்றப்புலியூர் நம்பி விவரிப்பது காண்க:—

பங்கயஞ்செங் கழுநீர்சா தகக்கண் சூத
பல்லவமின் மினிகோபம் பரிதி தீப
மங்கிவிழு தழற்குன்றி யுலோத்தி ரஞ்செவ்
வரத்தமுய லிரத்தமா துளைவீ வித்துச்
செங்கலில விதழ்குரவு பாட லப்பூத்
திலகமுருக் கிதழ்மஞ்சள் தேறு கோவை
தங்கொளிசிந் தூரங்குக்கிற் கண்ண சோகின்
தளிர்நிறங்களெவ்வணயோ டெழுநான் கென்பர்

திருவாலவாயுடையார் - திருவிளையாடற் புராணம்.

பன்னிரு குணங்களும் இருபத்தெட்டுவகை நிறங்களும் பெற்று விளங்கத்தக்க மாணிக்கங்கள் பதினாறு வகைத் தோஷங்கள் பெறுவிடினே, அவை புகழப்படும். இன்றேல் அவை பயனின்றாம். அக்குற்றங்கள் வருமாறு:—

மிகவுறு தாரச மத்தகங் குழிதல்
வெச்சமி லைச்சுமி வெகுளி
புகையொடு திருகல் முரனொடு செம்ம
ணிறுகுதல் கருகுதல் பொரிவே
யிகலுறு புடாய நெய்ப்பிலி சந்தக்
கேடுநீள் வெய்யகீற் றென்ன
வகைபடு குற்ற மெண்ணிரண் டாக
வகுத்தனர் மாசறு புலவர்

திருவாலவாயுடையார் - திருவிளையாடற் புராணம்.

மாணிக்கங்களின் குற்றங்களோடு ஏனைய மணிகளின் குற்றங்களையும், சம்பந்தர் தேவாரத்தில் பெரும்பாலும் சமணரைப்பழிக்கும் பத்தாவதுசெய்யுட்களில் ஏராளமாய்க் காணலாகும். "மேனியிற் சீவரத்தார்" "கருகுமுடலார்" என்பர். - திருநாவுக்கரசும் "குலம் பொல்லேன்,குணம்பொல்லேன்,குறியும் பொல்லேன், குற்றமே பெரிதுடையேன்" என்றபோது மாணிக்கப் பரீட்சையில் தன்னை உருவகப்படுத்தியாய்க் கொள்ளலுமாகும்.

இனி மும்மணியென்று புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்பனவற்றைப் புலவர் எடுத்துக்காட்டு

வார். இவற்றின்க ணுதித்த பலஇரத்தினங்களும் உள. அவையாவும் இம்மும்மணி வகுப்பிலே சேரும். எனினும் அப்பர் தேவாரத்தில் இவை காணப்படவில்லை. ஆயினும் பெரும்பற்றப் புலியூர் நம்பி பகர்வன காண்போம்.

"...உயர்புருட ராகம் செம்பொன்
வண்டகட்டின் தேனொழுகு நிறமே யென்பர்
உரியவயி ரேயம்பொன் மேன்மு லைப்பால்
ஒழுகுமொளி யென்பர்கோ மேத கத்தை
மருவுவயி ரேயத்தின் மீது தூய
மதுத்துளிமே வியதென்பர் வண்ணந் தானே.
முறைமைகெடா விவைதமக்கு நீதி யொன்றே
மும்மணியா வனசொன்ன புருட ராக
முறுவயிடே ரியங்கோமே தகமே யென்றுங்
கோதுவர்மற் றிவற்றின்க ணுதித்த வெண்ணின்
மறுவறுதோ ராவல்லி கனக தோரா
வல்லிமுத லாயினவுண் டென்பர் மக்று
நெறியுரைப்பி னுளபல விங்கரசர் மாட்டு
நேசமுடை யாருமைப்போலற் கண்டி லோமால்]

திருவாலவாயுடையார் - திருவிளையாடற்புராணம்.
25மாணிக்கம் விற்ற திருவிளையாடல் 21-22.

இனி எஞ்சிநிற்கும் மணிகளான பவளமும் முத்தும். இவற்றின் தன்மையைக் காண்போம். இவை தேவாரத்தில் பலவிடங்களில்உவமானங்களாய்எடுத்துக காட்டப்படும். இவை நிலத்திலும் பாறைகளிலும் துக்கிடைக்கக்கூடினும் பெரும்பாலும் கடலினின்றே யெடுக்கப்படுவன:—

சிகரத்திடை யிளவெண்பிறை வைத்தானிடந் தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி பவளத்திர ளோத
தகரத்திடை தாழைத்திரண் ஞாழற்றிர ணீழல்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே.
சுந்தரர்.

இவற்றுள் பவளத்தைக் கொடிப்பவள மென்றும் கூறுவர். இதன்நிறம் சிந்தூரம், ஈச்சஞ் செங்காய், செம்மண், தூதுவளைப்பழம், முசுமுசுக்கைப்பழம் இவை போல் விளங்கு மென்பர். இதன் குற்றங்கள் கருப்பத்தில் துளை, கல்லிடுக்கிற் பட்டு முடங்கிக் கிடத்தல், திருக்கு முறுக்குண் டெழுதல்என்னும் மூன்றுமாம். இக்குற்றங்கணீங்கியன நிறமும் உருட்சியும் பெறின் மிகவும் சிறப்பாய் விளங்கும். இவற்றை அப்பர் குறிப்பிடுவது காண்க :—

முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை யொளிர்பவ ளத்திரட்
டொத்தொப் பானைக் கண்டீர்தொழற் பாலதே!
பண்ணொத் தானைப் பவளந் திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர் வான்றனை
எண்ணத் தானை யிளம்பிறை போல்வெள்ளைச்
சுண்ணத் தானை கண்டீர்தொழற் பாலதே!

தொழிற்பாலதே யென்னும் திருக்குறுந்தொகை 2,3.

முத்து வகையில் வெள்ளி அங்காரகனென்பன மிக்க குணமுடையனவாம், இவை மாசற்ற வட்டவுருட்சியும், கனமும் பெற்று விளங்கும். வெண்ணீர்மை, செந்நீர்மை பெற்ற முத்துவருக்கத்திற்குக் காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலையென்னும் நால்வகைக் குற்றங்களுள. அவையே மிக்க குற்றங்கள். பின்னும் அறுவகைச் சாமான்ய குற்றங்களுமுள அவற்றைப் பெரும்பாலும் கவனியார்:—

தங்கியமுள் ளேறுமுகங் கறுத்தல் செந்நீர்
சார்வனமண் ணேறிடப்புத் திருகல்கோணை
மங்குறுசிப் பிப்பற்றுக் காக வன்னி
மருண் டிருத்தல் குறை பத்தே ........"

*திருநாவுக்கரசுநாயனர் முத்துக்களிற் சிறந்தநித்திலத்திற்குப் பரமன் திருமேனியை உதாரணமாகக் காட்டுவர்.

உருத்திரனை யுமாபதியை யுலகா ளானை
யுத்தமனை நித்திலத்தை யொருவன் றன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் றொத்தொப் பானை
நீறணந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.

திருக்கஞ்சனூர் - திருத்தாண்டகம் 5.

வன்றொண்டர் சிவபெருமான் திருநீற்றை முத்துக்கும், திருமேனியைப் பவளத்திற்கும் உவமைப் படுத்துவர்.

முத்துநீற்றுப் பவள மேனிச் செஞ்சடையானுறையும்
பத்தர் பந்தத் தெதிர்கொள்பாடிப் பரமனையே பணியச்
[சிறுவன்
சித்தம்வைத்த தொண்டர் தொண்டன் சடையனவன்
பத்த னூரண் பாட வல்லார் பாதம் பணிவாரே.

சுந்தரர் - திருஎதிர்கொள் பாடி - பண - இந்தளம் 11.

வெண்ணிற முத்தாகிய சுக்கிரவர்க்கத்தை மடவார் பற்களுக்குப் புலவர் உவமை கூறுவர்.

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கிய
கத்தை போர்த்த கடவுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே.
சம்பந்தர்.

கோமளம் * போன்ற சடையுடை யரனைப் பாடும் நம்பியாரூர் பலமணிகளில் பரமனை முத்துக் கொப்பிடுவதைக் காண்க:—

அருமணியை முத்தினை யானஞ்சு மாடு
மமரர்கடம் பெருமானை யருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பி னூறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம்பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்தியலுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங்கொள்ளிடத்தின்கரைமேல்
கருமணிகள் போனீல மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே.

திருக்கானாட்டு முள்ளூர்-பண்-கொல்லி, கௌவாணம்7.

---

* முத்தா நம்புனன் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென் பாரெல்லாம்
பொய்த்தா மேம்புல னைந்தொடு புல்கிய
மைத்தா நம்வினை மாற்றவும் வல்லரே.

திரு அரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை 1.

* காவலம்பெறு மாறும னன்னுதல்
ஆம ளஞ்சொலி யன்புசெ யின்னலால்
கோம ளஞ்சடைக் கோடிகா வாவென
ஏவ லின்றேனை யேசுமவ் வேழையே.

திருக்கோடிக்கா - திருக்குறுந்தொகை 4.



# பிரஜைகளின் கடமை

# (From Plato's dialogues)

## முன்னுரை

[சாக்ரடீஸ் என்னும் பெரியார் இன்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்குமுன் கிரேக்கர் நாட்டில் இருந்தவர். அவர் தர்மம் தவறாது வாழ்ந்து, தன்னை யடைந்தார்க்கு மெய்யறிவு புகட்டிவந்தார். எனினும், கிரேக்க இளைஞர்களை இவர் கெடுத்துவிடுகின்றார் என்ற குற்றம் சாட்டப்பெற்று அந்நாள் அரசாங்கத்தாரால் மரண தண்டனை விதிக்கப்பெற்றார். தண்டனைமுற்றப்பெறுமுன் அன்னவர் நண்பர் ஒருவர், சிறையினின்று தப்பித்துக்கொள்ளுமாறு சாக்ரிடிஸை வேண்டினர் என்றும், அக்கால அவர்களுக்குள் நடந்த சம்பாஷணை இது என்றும் சாக்ரடிஸின் சீடரான பிளேட்டோ எழுதியுள்ள வோர் கட்டுரையை அனைவரும் அறியும்பொருட்டு ஈண்டு மொழி பெயர்த்துத்தருகின்றோம். ஸாக்ரீடீஸின் பெருமையை, நாம் இவ்வாண்டு முதலில் "அறியாமை வேண்டப்படும்" என்னும் தலைப்பில் வரைந்துள தலையங்கங்களில் ஓரளவு காணலாம்.]

ஆசிரியர்.

சம்பாஷணை நடக்குமிடம்—ஏதன்ஸ்
நகரச் சிறைக்கூடம்.

காலைநேரம். சாக்ரடீஸ் தூங்கிக்கொண்டிருக்கின்ற பொழுது, அவரது அண்மிய நண்பர்களில் ஒருவரான கிரிட்டோ என்பவர் சிறைக்குள் செல்கின்றார். இவர் சென்று சிறிதுநேரம் கழிந்ததும் சாக்ரீடீஸ் துயில் நீத்தெழுந்து வார்த்தையாடுகின்றார்.

சாக்ரடீஸ்:—நண்பா, இந்த வேளையில் இங்கு ஏன் வந்தாய்? இன்னும் பொழுது முழுதும் புலரவில்லையே.

கிரிட்டோ :—ஆம், இன்னும் புலரவில்லை.

சா:—இப்பொழுது எத்தனை நாழிகை இருக்கும்.

கிரி:—அருணோதயமாகின்றது.

சா:—காவலாளன் உன்னை இவ்வேளையில் சிறைக்குள் புகவிட்டது எனக்கு வியப்பைத் தருகின்றது.

கிரி:—இங்கு நான் அடிக்கடி வருவதால் அவன் என்னை அறிவான். மேலும் எனது உதவியும் பெற்றுளான் அவன்.

சா:—நீ இப்பொழுதுதான் வந்தாயோ?

கிரி:—நான் வந்து சிறிதுநேரம் ஆகின்றது.

சா:—பின் ஏன் உட்கார்ந்திருந்திருந்தாய். என்னை உடனே எழுப்பியிருக்கலாகாதா?

கிரி:—தூக்கமில்லா இரவும் துக்கமும் என்னை ஏன் விட்டு அகலவில்லையோ, அறியேன். ஐய, நீயோ அமைதியுற்ற தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது எனக்கு ஆச்சரியமா யிருக்கின்றது. நீ துயிலும் வேளையிலேனும் தொலைந்திருக்கும் துன்பம் உன்னைக்கதுவாதிருக்கவேண்டியே எழுப்பாதிருந்தேன். எந்நிலையிலும் வெருள்வதில்லா அமைதியான மனைநிலையில் நீ பெருமைபெற்றவன் என்பதை நான் நன்கறிவேன். ஆயினும் உனக்கு நேர்ந்துள்ள இந்நிலையில் இவ்வளவு அமைதியுடன் முகமலர்ந் திருப்பாயென்று யான் எண்ணவேயில்லை. இருக்க வல்லவரையும் நான் இதுவரைக் கண்டறியேன்.

சா:—ஏன் நண்பா, என்னளவு வயதை அடைந்தவரெவரும், சாவைக்கண்டு அஞ்சி வருந்த வேண்டுவதில்லையே.

கிரி:—உன்னிலும் வயதுசென்ற தொண்டு கிழவர் பலர் இதுபோன்ற அவதியை அடைகின்றனர்; அப்பொழுது அவர் முதிர்ந்த வயதின் நினைவினால் வருத்தத்தை மாற்றிக்கொள்வதில்லை.

சா :—இருக்கலாம், அஃதிருக்கட்டும். இவ்வளவு காலையில் நீ என்பால் வந்த காரியம் என்னவென்று இன்னும் நீ சொல்லவில்லையே.

கிரி:—துக்கத்தையும் துன்பத்தையும் தருவதான செய்தி யொன்றைக் கொண்டுவந்துளேன். இது உனக்குமாத்திரம் துக்கத்தையும் துன்பத்தையும் தருவதொன்று அன்று; உனது நண்பர் அனைவருக்கும் துக்கத்தையும் தாங்கவியலாத் துயரத்தை எனக்கும் தந்திடவல்லது.

சா:—என்ன அது; *டிலாஸ் என்னும் க்ஷேத்திரம் சென்ற கப்பல் திரும்பியதோ? அது திரும்பியதும் நான் இறக்க வேண்டும் என்பதோ?

கிரிட்டோ:—அக்கப்பல் இன்னும் வந்துசேரவில்லை. ஆனால் இன்றுமாலைக்குள் அது வந்து சேர்ந்துவிடலாம். சன்னியம் (Sanium) என்ற ஊரிலிருந்து வந்தவர் சிலர், இக்கப்பலை அங்கு விட்டுவந்ததாகச் சொல்லுகின்றனர். எப்படியாயினும் ஐய, உன் வாழ்நாளின் கடைசி நாள் நாளையாகும்.

சா:—நல்லது, நண்பா, கடவுளுடையவிருப்பம் அதுவானால், நடக்கட்டும். ஆனால் ஒருநாள் காலதாமதம் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன். கப்பல் வந்த தினமே என்னை வதைக்கமாட்டார்கள்.

கிரி:—காலதாமதமாகும் என்று ஏன் சொல்லுகின்றனை.

சா:—கப்பல் வந்துசேர்ந்த தினத்திற்கு மறுதினந் தான் நான் கொல்லப்படுவேன்.

கிரி:— ஆம், அதிகாரிகளும் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

சா:—நாளைக்கும் கப்பல் இவ்விடம்வந்து சேராது என்றே நான் நினைக்கின்றேன். இரவில் தூக்கத்திலோ, அல்லது நீ வந்து என்னை யெழுப்பாதிருந்தபொழுதோ, ஏற்பட்ட ஒரு தோற்றத்தினின்று இதை நான் அறியலானேன். ஆகவே நாளையுடன் என் வாழ்வு முடியவில்லை.

கிரி:—அது என்ன தோற்றம்.

சா:—வெள்ளையுடை தரித்த ஒரு அழகிய பெண்ணுருவம் தோன்றியது. தோன்றிய அவ்வுருவம் என்னை அழைத்து, 'ஓ சாக்ரிட்டிஸே, இன்றைக்கு மூன்றாம் நாள் நீ பித்தியா(Phthia)போய்ச்சேருவாய்' என்று சொல்லி மறைந்தது.

---

*டிலாஸ் என்ற க்ஷேத்திரத்திற்கு, ஏதன்ஸ் நகரத்திலிருந்து ஒரு கப்பல் அடிக்கடி போவதுண்டு. அந்தக்கப்பல் ஒருமுறை டிலாஸிற்குப்போய்த்திரும்ப ஒருமாதம் பிடிக்கும். அந்தக் கப்பல் புறப்பட்டுவிட்டால், அது திரும்பி ஏதன்ஸ் வரும் வரையில் மரணதண்டனை விதிக்கப்பெற்றவர்களைக் கொல்லமாட்டார். சாக்ரடீஸிற்குத் தண்டனை விதித்ததும் அக்கப்பல் பிரயாணமாயிற்று. அது இப்பொழுது ஏதன்ஸ் நகரம் வந்துசேரும் சமயம்.

கிரி:—வியப்புறு கனவே, ஐய, இது !

சா:—அத்தோற்றம் கூறிய மொழிகளின் பொருள் பற்றி ஐயம் எதுவுமில்லை என்றே நினைக்கின்றேன். (தான் அன்றைக்குமூன்றாம்நாள் இறந்துபோகவேண்டுவது கடவுளின் விருப்பம் என்னும் பொருளைக் குறித்தது அத்தோற்றம் எனத் தன் நண்பனுக்குச் சாக்ரிடீஸ் தெரிவிக்கின்றார்.)

கிரிட்டோ:—ஆம். அது குறிக்கும் பொருள்பற்றிச் சந்தேகம் ஒன்றுமில்லை. ஆனால், எனது அருமை நண்பா, நான் மறுபடியும் உன்னை வேண்டிக்கொள்கின்றேன்; நான் சொல்வதைக் கேட்பாய், தப்பித்துக் கொள். நான் சொல்வதை மறுப்பாயேல், நீ இறந்துபடுவாய். நீ சாவதால், இனி ஒருநாளும் பெற முடியாத நண்பனை நான் இழப்பது மல்லாமல் வேறொன்றுமுளது. என்னையும் உன்னையும் அறியாதார் பலர், என்சொல்வார் தெரியுமா? விருப்பமுண்டாயின் 'எனது பொருளைச் செலவுசெய்து நான் உன்னைக் காப்பாற்றி யிருக்கக்கூடும். ஆனால் நண்பன் உயிரினும் பணத்தையே பெரிதென மதித்து விட்டேன்' என்று தூற்றுவர். இதைவிட ஐய, அவமானம் ஒன்றுஉண்டோ. நண்பனது உயிரினும் உயரியதாகப் பணத்தை எண்ணினேன் என்று அவர்கள் என்மீது பழிசுமத்தவேண்டுமோ? நான் உன்னைத் தப்புவிக்க முயன்றேன். ஆனால் நீதப்பித்துக்கொண்டு வெளியேற மறுத்துவிட்டாய் என்பதைச் சொன்னாலும் ஜனங்கள் ஏற்கமாட்டார்.

சாக்:—எனது அருமை நண்பா, கிரிட்டோ, ஜனங்களில் பலர் சொல்லிக்கொள்வதைப்பற்றி நாம் கவலைப்படலாமா? நல்லவர் அபிப்பிராயமே கவனித்தற்குரியது. அந் நல்லவர் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கருதுவார்.

கிரி:—உன்னையே எடுத்துக்கொள்வோம். நடந்த விஷயத்தை நோக்குமிடத்து, அதிகமான தொகையினரது அபிப்பிராயத்திற்கு மதிப்புக்கொடுத்தே தீரவேண்டுமென்பது ஏற்படவில்லையா, சொல்லுவாய். அவர்களது நல்ல எண்ணத்தை இழந்தவர்களுக்கு அந்த அதிகமான தொகையினரால் கொடிய தீமைகள் பல இழைக்கப்படலாம் அன்றோ.

சா:—அவர்களால் தீமைசெய்யமுடியட்டும். அதைத்தான் நான் விரும்புகின்றேன். தீமைசெய்ய முடியக் கூடியவர்களால் நன்மையும் செய்ய இயலும். அது நலமுடைய தொன்றே. ஆனால் உண்மையோ என்னவென்று கேட்பாயேல், இந்த அதிகமான தொகையினரால் நன்மையும் செய்ய இயலாது; தீமையும் செய்ய இயலாது. ஒருவனை அறிஞனாகவோ மூடனாகவோ அவர்களாற் செய்யமுடியுமோ. அவர்களால் நேர்வதெல்லாம் அவர் செயலல்ல; எதேச்சையாய் நேர்வதன் (Chance) முடிவேயாகும்.

கிரிட்டோ :— இதை நான் சிறிதும் மறுக்கவில்லை. ஆனால், நீ என் வார்த்தையைக் கேட்க மறுப்பது என்னையும், மற்ற நண்பர்களையும் கருதியே யன்றோ என்பதைத் தயவுசெய்து சொல்லவேண்டும். தப்பி ஓடிவிட்டால், நாங்கள் உனக்குத் துணைசெய்தோம் என்று அரசாங்கத்தாரால் கஷ்டப்படுத்தப் படலாம் என்றும் எங்கள் சொத்தின் ஒரு பகுதியோ அல்லது முழுதுமோ பறிமுதல் செய்யப்படலாம் என்றும் அஞ்சுகின்றாய்போலும். சொத்துப் பறிமுதலுடனும் நில்லாது இன்னும் பெரியதான கஷ்டங்கள் எங்களுக்கு வரலாமென்றும் நீ நினைக்கலாம். உன்னைக் கலங்கச் செய்வது இந்தப்பயமானால், அதனை விடுத்து அமைதியாய் இருக்கலாம். உன்னைக் காப்பதற்காக, இது மாத்திரமன்று, இன்னும் பெரிய ஆபத்துக்களையும் ஏற்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனவே நான் சொல்லுகிறபடி நீ செய்வதே நேர்.

சாக்ரிடீஸ்:—நண்பா நீ சொல்கின்ற இந்த ஒரு பயம் இருக்கின்றது. ஆனால் நான் அஞ்சுவது இது ஒன்று தான் என்று கொள்ளவேண்டா.

கிரிட்டோ:—அதற்காக நீ கவலவேண்டா. உனக்கு அதிக கஷ்டமும் நஷ்டமும் இல்லாமல் உன்னைச் சிறையிலிருந்துவெளியே கொண்டு உன்னைப்போற்றிக் காப்பாற்றப் பலர் விருப்பமுடன் இருக்கின்றனர். ஒற்றர்கள் அவர்களைக் கஷ்டத்திற் குள்ளாக்குவார்களே என்றுங் கலங்கவேண்டா. சிறிதே பணம் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்துவிடலாம். எனக்குச்செல்வமோ வேண்டிய அளவு உளது. அது முழுதையும் உன் பொருட்டே யான் உவந்து கொடுத்துவிடுகின்றேன். எனது பணம் முழுதும் இப்படிச் செலவாக நீ விரும்பவில்லையாயின், இன்னும் பலர் தங்கள் தங்கள் உடைமைகளை உன்பொருட்டுச் செலவுசெய்ய விருப்பமுடையவர்களா யிருக்கின்றனர். அவர்களில் ஒருவரான ஸிமியாஸ் என்பவர் தீபன் (Theban) நாட்டைச் சேர்ந்தவர். உன்னை விடுவிப்பதற்கென்றே மிகுந்த பணத்துடன் இங்கே வந்துள்ளார். ஸிபஸூம், மற்றவர்களும் உன் பொருட்டு அவரவர் பொருள்களைச் செலவுசெய்ய விருக்கின்றனர். எனவே நீ சிறையினின்று வெளியேறுவதற்குச் சிறிதும்தயங்கவேண்டா? தப்பித்துக்கொண்டு வெளியேறி எங்குப்போய் என்ன செய்வது என்று நீ விசாரணை காலத்தில் கூறியதுபோல் கூறிக்கொண்டிருக்க வேண்டா. நீ எங்குச் சென்றாலும், உன்னை ஏற்று ஆதரிக்க அங்கங்கு மனிதர் இருக்கின்றனர். நீ விரும்பினால் அங்கே செல்லலாம். உன் வரவை மதித்து வேண்டுவன செய்வார்கள், திஸலி நாட்டார் உனக்கு வருத்தம் ஒன்றும் விளைக்கமாட்டார். சுலபமாய்த் தப்பித்துக்கொண்டு வாழ்வதற்கு இயலுமிச் செவ்வியில் உயிரை இழப்பாயேல் அது அறிவுடைச் செயலுமாகாது. வேண்டுமென்றே உன் பகைவர்களின் கையில் உன் உயிரை ஒப்படைப்பதாகும். இதுநிற்க உன் மக்களை விட்டுவிடல் நீதியோ, சொல். அவர்களை வளர்த்துக் கல்வி பயில்வித்து வேண்டுவன செய்தல் உன் கடன். அப்படியிருக்க அவர்களை நிர்க்கதியாய் விடுத்துச் செல்லுதல் பொருந்தாத செயலாகும். பின்னர் அவர்கள் 'நின்கடமையை ஆற்றினையல்லை' என்றே சொல்வர். குழந்தைகளைச் செவ்வனே வளர்த்துக் கல்விப்பயிற்சி தந்து அவர்களை ஆளாக்கிவிடாதவன் மக்களைப் பெறுவதெல்லாம் பாவம். நீ தர்மத்தையே உன் மதமெனக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றாய். அத்தகையநீ உயிரோடிருந்து குழந்தைகள்பால் செய்கடன் புரியாது உயிர் துறப்பதற்கு விரும்பினால் நல்லதும் ஆண்மையுடையதுமான காரியத்தைச் செய்யாது கோழைபோல் சுலபமான மார்க்கத்தை நாடியவனாவாய். இப்பொழுது நேர்ந்துள்ள நிலையில் உன்னைக் காவாது விட்டதற்குக் காரணம் எங்களது தைரியக் குறைவுதான் என்பதை உன்



னுங்கால், நானும் உன்னுடைய மற்ற நண்பர்களும் நாணவே வேண்டும். விசாரணையும் நடைபெறாதிருந்திருக்கலாம். நடந்தாலும் வேறுவிதகாக அது முடிந்திருக்கலாம். இந்நிலையில் இருந்திருக்க வேண்டியதில்லை.

எங்களது சிறுமையாலும் கோழைத்தனத்தினாலும் இப்படிக் காரியம் நடைபெறலாயிற்று. இப் பழிச்சொல் எவ்வளவு அவமானத்தை விளைக்கக் கூடியது. எங்களுக்கு இது மனச்சோர்வைத்தராதோ. எனவே தப்பித்துக்கொள்ளத் தீர்மானித்துவிடு. இது யோசிப்பதற்கு ஏற்ற காலமில்லை. கால தாமதம் இனிச் செய்யலாகாது. செய்தால் காரியம் கெட்டுவிடும். நான் வேண்டிக்கொள்கின்றேன். நான் சொல்வதற்கிணங்கிச் சிறையினின்று நண்ப நீ,வெளியேறுவாய். (தொடரும்)

## தமிழ்ப் பாடம் 140.

[752-வது பக்கத் தொடர்ச்சி]

189123

### நைடதம்—நளன் தூதுப் படலம்

தமயந்தியின் பேரழகைக்கண்டு வியந்து பலபட அதனைத் தன்னுளே பாராட்டி மகிழ்ந்த நளன், இந்திரன்தந்த மந்திரத்தைவிட்டு அவள் காணத் தன் உருவொடும் நின்றான். தமயந்தியும் அவனை விதுப்புற நோக்கலானாள்.

படவர வல்குற் செவ்வாய்ப்
பனிமொழிக் கொடியன் னாளை
மடலவிழ் கமலப் போதின்
மடந்தையென் பதற்கு வெற்றிக்
கடகளி றென்ன நின்ற
காமரு காளை தன்னை
யிடையறா தினிது நோக்கி
யிமைப்புறு குறையுந் தீர்ந்தாள். 57

உரை :—படம் அரவு அல்குல் - பாம்பின் படத்தைப்போன்ற அல்குலையும், செவ்வாய் - சிவந்த வாயையும், பனிமொழி - குளிர்ந்த சொற்களையும் உடைய, கொடி அன்னாளை - பூங்கொடிபோன்ற தமயந்தியை, மடல் அவிழ்-இதழ்கள் அவிழ்ந்த, கமலம் போதின் - தாமரைமலரில் வீற்றிருக்கும், மடந்தை என்பதற்கு - இலக்குமியே என்று சொல்வதற்கு ஏற்க—

கடம் களிறு என்ன - மதம் பொழிகின்ற யானையைப்போல், நின்ற - தன் எதிரில் நின்ற, காமரு காளை தன்னை - அழகுடைய காளைபோன்ற நளனை, இடை அறாது - இடைவிடாமல், இனிது நோக்கி - இனிமையாகப் பார்த்து, இமைப்பு உறு குறையும் தீர்த்தாள் - கண்கொட்டுவ தென்னும் அவ்வொரு குறையும் இல்லாதவளானாள்.

விரிவுரை :— எதிர்நின்ற நளனது அழகால் கதுவப்பெற்ற தமயந்தியின் கண்கள் இமையாமல் அவனை இனிது நோக்கின, என்பது இச்செய்யுளின் பொருள். இலக்குமியே இத்தமயந்தி என்று எல்லோரும் இயம்புவார். ஆனால் தேவதையாகிய இலக்குமி கண்கொட்ட மாட்டாளே, இந்தத் தமயந்தி இமைக்கின்றாளே எனச் சிலர் ஐயுறலாம். ஆதலின் 'இமைக்கும் இலக்குமி' என்று இவளைச் சிறிது வேற்றுமைப்படுத்தியே கூறவேண்டி யிருந்தது. இவ்வாறு இவளை இலக்குமியினின்று இமைக்குங் காரணத்தால் வேற்றுமைப்படுத்த வேண்டி நேர்வது ஓர் குறையே. இப்பொழுது அவள் நாட்டிய பார்வையொடு நளனை நெடிதுநோக்குந் தன்மையால் இமைக்காதவளாகின்றாள். ஆதலால் அக்குறையுந் தீர்ந்து எல்லாப்படியாலுந் திருமகளே ஆகிவிட்டாளவள்.

---

இனி நளனைக் கண்ட தமயந்தியும் அவள் தோழிமாரும் சிந்திக்கின்றவற்றைக் கவி ஐந்தாறு பாட்டுக்களிற் கூறுகின்றார். அவைகளில் ஒன்றே இப்பாடத்திற் காண்போம்.

மங்கையர் நிறையு நாணுங்
கவர்ந்திட வனப்பு வாய்ந்த
இங்கிவன் றன்னை ஞால
மின்புறப் படைத்தி லானேற்
றிங்களங் கண்ணி வேய்ந்த
செஞ்சடைக் கடவு ளெங்ஙன்
பைங்கழை மதனைக் கொன்ற
படுபழி தீரு மாறே. 58

உரை :—மங்கையர் - மாதர்களது, நிறையும் - மன உறுதியையும், நாணும் - நாணத்தையும், கவர்ந்திட - கவர்ந்துவிடும்படியான, வனப்புவாய்ந்த-அழகுடைய, இவன் தன்னை - இப்புருடனை, ஞாலம்-இப்பூவுலகத்தார், இன்புஉற - கண்டு இன்பமடையும்படி, படைத்து இலானேல் - படைத்திருக்காவிட்டால், திங்கள்-சந்திரனையும், அம்கண்ணி - அழகிய கொன்றைமாலையுஞ், வேய்ந்த - சூடிய, செம் - சிவந்த, சடை - முடியையுடைய, கடவுள் -சிவபிரான், பை - பசுமையான, கழை - கரும்பை ஏந்திய, மதனை -மன்மதனை, கொன்ற-கொன்றுவிட்ட, படுபழி - கொடியபழியை, தீருமாறு - தீர்த்துக்கொள்வது, எங்ஙன் - எப்படியியலும்.

விரிவுரை:—தன்னோடு எதிர்த்துப் போர்செய்யுந் திறனில்லாத மன்மதனைச் சிவபிரான் கொன்றது படுபழியாகும். இரும்புவில் அல்லாது கரும்புவில்லை ஏந்தியிருத்தல் மன்மதனது திறலின்மையைக் காட்டும். அவனைக் கொன்றதற்கு ஓர் ஈடு செய்யாவிடில் அப் படுபழி ஒருநாளுந் தீராது. அப்படி ஈடுசெய்ய முயன்றதன் காரியந்தான் சிவபெருமான் இப்புருடனைப் படைத்ததுபோலும் எனத் தமயந்தி முதலாயினோர் ஊகிக்கின்றனர். மன்மதனுக்கே இணையான அழகுவாய்ந்தவன் இந்நளன் என்பது இதன் பொருள். இவ்விதம் ஒன்றினை ஊகிக்கப் புகுவதுபோல் மற்றொன்றின் தன்மையைக் காட்டும் திறமையொடு திகழும் அணியை உய்த்துணர்வணி என்பர். இது வடமொழில் சம்பாவனாலங்காரம்

எனப்படும். உலோபிகள் கைப்பொருள் உலகிடை உலவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தாலோ நான்முகன் கள்வரையும் இக் கலிகாலத்தில் படைத்திருக்கின்றான்'' என்பது இவ்வணிக்கு உதாரணமாகும்—

---

கலைநிலாத் தவழு மாடக்
கடிநகர் கடந்து போந்த
சிலைவலாய் நீயிங் கெய்தச்
சிறப்புடைப் புவனந் தம்மிற்
பொலிவிழந் திருந்த தெந்தப்
புவனநீ பொருள தாக
நலனுறு புனித மாய
தெப்பெயர் நவிற்று கென்றார். 59.

உரை:—கலை - கிரணங்களையுடைய, நிலா - சந்திரன், தவழும் - தவழ்கின்ற (அவ்வளவு உயர்ந்த), மாடம் - மாடங்களையுடையதும், கடி - காவலையுடையதும் ஆன, நகர் - இந்நகரத்தை, கடந்து போந்த- கடந்து வந்த, சிலைவலாய் - வில்தொழிலில் வல்லவனே,—

நீ இங்கு எய்த - நீ இங்கு வந்துவிட்டதால், சிறப்பு உடைப் புவனம் தம்மில் - சிறப்புடைய நாடுகளுக்குள்ளே, பொலிவு இழந்து இருந்தது - அழகும் ஒளியும் இழந்துகிடப்பது, எப்புவனம் - எந்த நாடு —

நீ - உன்னையே, பொருளது ஆக - தான் குறிக்கும் பொருளாகப் பெற்றிருப்பதால், நலன் உறு - நன்மை வாய்ந்த, புனிதம் ஆயது - தூய்மையை அடைந்தது, எப்பெயர் - எந்தப் பெயர்,—

நவிற்றுக - சொல்க, என்றார் - என்று (தமயந்தியின் தோழியர்) வினவினர்.

விரிவுரை:—நளனைநோக்கி அவன் ஊரும் பேரும் வினவினர்க ளென்பது இச்செய்யுளின் பொருள். ஆனால் இவை நேர்முகமாகக் கேட்கப் பெறவில்லை. "நீ வந்து விட்டதால் பொலிவழிந்து கிடக்கும் நாடு எது'' என்று கேட்கின்றனர். "எவ்வூரை விட்டு வந்தாய்'' எனக் கேட்டவாறும் இது. அப்படியே, 'உன்பேர் யாது' என்று கேட்பதற்கு மாறாக, "நீ பொருளா யிருப்பதால் எப்பெயர் புனிதமாயிற்று'' என்கின்றனர். ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல். நளனாகிய பொருளைக் குறிக்கின்றதால் பெருமையுந் தூய்மையும் எய்திய அப்பெயர்ச் சொல் யாதெனக் கேட்கின்றனர். இதனால் அறியவிழைந்தன அவன் ஊரும் பெயருமாக, அதற்கு மாறாக, பொலிவிழந்த நாட்டைத் தெரிந்து இரங்கவும், புனிதமடைந்தபெயரைத் தெரிந்து வாழ்த்தவும் வேண்டினார்போல் வாசகம் அமைந்திருக்குமிது பிறிதினவிற்சியணி, ஆகும்.

---

நளன், தமயந்தியை வதுவைகொள்ள விழைந்திருக்கும் இந்திரன் முதலிய தேவர்களுக்கு மணத்தூதாகத் தான் போந்தவாறு சொல்லித் தன் செய்தி செப்பலாகின்றான்.

ஐந்தரு நீழல் வேந்தன்
ஆர்கலிக் கிறைவன் வெய்ய
செந்தழற் கடவு டென்பாற்
றிசையுறை தரும னின்னோர்
பைந்தொடி நின்னை வேட்டுப்
படைமதன் பகழி பாயச்
சிந்தனை பிறிதாய் மாழ்கித்
தெருமர லெய்து கின்றார். 60

உரை:—பைந்தொடி - பசுமையான பொன்னாற் செய்த வளையல்களை அணிந்தவளே, ஐந்தரு - பஞ்ச தருக்களின், நீழல் - நிழலில் வீற்றிருக்கின்ற, வேந்தன் - அரசனாகிய இந்திரன், ஆர்கலிக்கு இறைவன் - கடலுக்குத் தலைவனான வருணன், வெய்ய - வெப்பமுடைய, செம் - சிவந்த, தழல் கடவுள் - அக்கினி தேவன், தென்பால் திசை உறை - தெற்குத் திசையிலிருக்கும், தருமன் - யமதர்ம ராஜன், இன்னோர் - ஆகிய இவர்கள், நின்னை - உன்னை, வேட்டு - விரும்பி, படை - சேனையையுடைய, மதன் - மன்மதனுடைய, பகழி - பாணங்கள், பாய - பாய்வதால், சிந்தனை - அவர் மனம், பிறிதாய் - வேறுபட்டு, மாழ்கி-கலங்கி, தெருமரல் - ஆசையால் நேரும் சஞ்சலத்தை, எய்துகின்றார் - அடைகின்றனர்.

---

இங்கிவர் தம்மை யாசைக்
கிறைவரென் றறைவ தெல்லாந்
தங்கிய திசையின் பேரால்
சாற்றிய மாற்ற மன்றே
கொங்கவிழ் குழையிற் றாவிக்
குமிழ்மிசை மறியும் வேற்க
ணங்கலுழ் மேனி யாய்நின்
னாசையால் வந்த தாமால். 61

உரை:—கொங்கு - வாசனை, அவிழ் - வீசுகின்ற, குழையில் - நின் காதணியில், தாவி - பாய்ந்து, குமிழ்மிசை - குமிழம் பூவைப்போன்ற நின் மூக்கின் மீது, மறியும் - மீள்கின்ற, வேல் கண் - வேல் போன்ற கண்களையும், அம் - அழகு, கலுழ் - வழிகின்ற, மேனியாய் - வடிவையும் உடையவளே,

இங்கு - இப்பொழுது, இவர் தம்மை - இந்தத் தேவர்களை, ஆசைக்கு இறைவர் - ஆசைக்குத் தலைவர், என்று - என்று, அறைவதெல்லாம் - சொல்வதெல்லாம், தங்கிய - அவரவர் தங்கியுள்ள, திசையின் பேரால் - திக்குக்களின் பேரினால், சாற்றிய - சொல்லிய, மாற்றம் அன்று-வார்த்தை ஆகாது. (ஆயின், 'ஆசைக்கிறைவர்' என்ற பெயர் அவர்களுக்கு எதனால் வந்தது என்றாலோ—)

நின் ஆசையால் - உன் மீது வைத்துள்ள அதிக ஆசையினால், வந்தது ஆம் - அவர்களுக்கு அப்பெயர் வந்தது ஆகும். (ஆல்-அசை)

விரிவுரை:—சொற்றிறம் வாய்ந்ததேனும், தேவர்களைச் சிறிது பரிகசிப்பதுபோல் அமைந்துள்ள இவ்வாசகம் வள்ளல் நளனுக் கடுத்ததன்று. ஆசையென்னும் சொல்லிற்கு வேட்கை என்றும், திசை என்றும் இரண்டு பொருள்கள் உள. இந்திரன் வருணன் அக்கினி யமன் முதலிய தேவர்கள் ஒவ்வொரு திசைக்குத் தலைவராதலால் அவரை "ஆசைக்கு இறைவர்'' என்று இயம்புவதுண்டு. ஆனால் அவர்களுக்கு "ஆசைக்கிறைவர்'' என்ற பெயர் வந்தது இக்காரணத்தால் அன்றெென நளன் இங்கு மறுக்கின்றான். மறுத்து, தமயந்தியின்மீது அவர் கொண்டுள வேட்கை மிகுதியால் "ஆசைக்கிறைவர்'' என்னும் பெயர் பெற்றனர் எனச் சாதிக்கின்றான்.



'ஆசை' என்னுஞ்சொல் சிலேடையாக உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது. ஆயினும் இது சிலேடை ஆகாது. ஒரு சொல் அல்லது சொற்றொடர், இரண்டு மூன்று பொருள்கள் படக்கூடுமானால், அவ்விரண்டு மூன்று பொருள்களும் ஒருங்கே பயன்படும்படி பயில்வது சிலேடை. இதன் இலக்கணத்தை முன் (2—611) இதழ்களில் விரிவாக விளக்கியிருக்கின்றோம். "துறவிகளும் மூங்கில்களும் கிளைவிட்ட வேங்கடமே''—என்னுங்கால், 'கிளைவிட்ட' என்பதற்குரிய உறவினரை விட்டு விடல், "கிளைகளை வளரவிடுதல்' என்னும் இரண்டுபொருள்களும் ஒருங்கே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படியே "கலைமதி மருட்டும் முகத்தாள்'', என்பதில், கல்வி நிறைந்த புத்தியையுடைய ஆடவர்களையும் மயக்கும் முகத்தை யுடையவள்'' என்னும் பொருளும், "கிரணங்கள் நிறைந்த சந்திரனையும் புறங்காட்டியோடும்படி செய்யும் அழகுவாய்ந்த முகத்தையுடையவள்'' என்னும் பொருளும் ஆகிய இரண்டும் பொருந்த அமைத்துப் பயிலப்பெற்றிருக்கின்றன. ஆதலின், ஒரு சொல் அல்லதுசொற்றொடர்க்குரிய பலபொருள்கள் ஒருங்கே பொருந்தும்படி நவில்வது சிலேடை.

இச்செய்யுளில் "ஆசைக்கிறைவர்'' என்பது அவ்வாறு பயிலப்பெறவில்லை. அதற்குரிய இரண்டு பொருள்களில் ஒன்றினை மறுத்து மற்றொன்றைச் சாதிக்கின்றார் கவி. இவ்வகையில் சிலேடையிலிருந்து வேறுபட்டிருக்கும் இவ்வணிக்குப் பிறிநிலை நவிற்சியணி என்பது பெயர். இது வடமொழியில் நிருக்தியலங்காரம் என அழைக்கப்படும், "அலர்'' என்பதற்கு மலர் என்றும், பழிச்சொல் என்றும் இரண்டு பொருள்கள் உள. மலர்மேல் வீற்றிருப்பதால் பிரமனுக்கு 'அலரவன்' என்னும் பெயர் வந்தது. ஆனால் அவனைப் பார்த்து, "நான்முகனே, நீ பாபிகளையும் மூடர்களையும் படைக்கின்ற பழியைச்சுமத்தலாலல்லன்றோஉன்னை உலகத்தார்'அலரவன்' என அழைக்கின்றனர்'', என்பது இப் பிறிநிலை நவிற்சியணியாம்.

"அம்கலுழ் மேனியாய்''—அழகு வழிகின்ற உருவமுடையவளே என்பது பொருள். வழிகின்ற அழகு என்பதால் அதன் மிகுதி காட்டப்பெற்றிருக்கின்றது. "உன் மூஞ்சியில் அழகு வழிகின்றதுபோ'' என்று கூறும் வஞ்சனை வழக்கு இதுபற்றியே போலும்.

கொங்கவிழ் குழையிற்றாவிக் குமிழ்மிசை மறியும் வேற்கண்—காதிற்கும் மூக்கிற்கும் இடையே புரள்கின்ற நீண்ட கண்கள் என்பது பொருள். குழையென்பது காதணி. ஆனால், வாசனை வீசுகின்ற குழை எனக் கூறப்பட்டிருப்பதால், நந்தன வனத்திலிருந்து வந்த தமயந்தி மலர்களைப் பறித்துக் காதில் குழைபோல் நாலவிட்டிருந்தனள் எனக் கருதவேண்டும். குமிழ் என்பது குமிழம்பூவைப் போன்ற மூக்கினைக் குறிப்பது உவமை ஆகுபெயர். கொங்கவிழ் மலர்க் குழையிலிருந்து குமிழம்பூவிற்குப்பாய்கின்றகண்களை வண்டென உவமிப்பது பொருந்தும். அவ்வாறு உவமை கூறத்தான் நளன் ஆரம்பித்திருக்கலாம். ஆனால் அவள் அழகினால் அவசமுற்ற அவன் மனம் தன் நிலைநில்லாது வண்டுபோன்ற கண் என்னமல் வேல் போன்ற கண்' என உவமையை மாற்றிவிட்டது. மேலும் அவளுடைய பார்வையும் அவன்மீது அப்பொழுது தைத்திருக்கும். ஆனால், வேலோ, மலருக்கும் மலருக்கும் மறித்துப் பாயாது. இப்படி உவமையை அல்லது உருவகத்தை ஒன்றாகத் துவக்கி வேறொன்றாக முடிப்பதை ஆங்கிலத்தில் confused simile, confused metaphor என்று கூறுவார். இதற்கு நேரான தமிழ்த்தொடர் இல்லை யாகையால் நாம் மருளுவமை என அழைப்பின் அது ஒருவாறு பொருந்துமென்று நினைக்கின்றோம்.

## தனிப்பாடல்கள்.

குருபரனுகி யருளிய பெருமை.

மாமுகி லூர்தியும் பூமலி புனிதனும்
மாமறு மார்பனும் ஏமுறு தேவரும்
அஞ்சி யிரங்கி யரற்றி யாவித்து
வஞ்சகச் சூரன் வருத்துதற் குடைந்து
கயிலை மேவிய கண்ணுதற் பெருமான்
செயலைத் தண்டளிர்ச் சேவடி பரவுநர்
காக்கக் கடவிய கடவு ணீயே
தூக்கிக் காத்தி சோத்தமென் றிரப்புழி,
அருளுருத் தமர்ந்த வற்புதக் கடவுள்
மருளுறு மன்னவர் மயக்கந் துடைக்குபு
தெருளுறு தொன்மைத் திருவுரு நீங்கி
மறப்பெருங் கருணை வானுருக் கொள்வோன்
பரிதிகண் மழுங்கப் பாயொளி கூரும்
விரிசுடர் நெடுமுடித் திருமுக மாறும்
கருவினை வேரறக் கலந்து நோக்கும்
உருகெழு விழிக ளோரா றிரட்டியும்
வரைகட லசு ரிருண்மலர வலிகெடுக்கும்
விரைமல ருருள்தொடை மிகுபுய வெற்பும்
தமிழ்மறைக் கிண்கிணிச் சதங்கைகள் புலம்பும்
அமிழ்தருள் தாமரை யவிர்கதி ரடியுமாய்
உலக முய்யவு மும்பரார் வாழவும்
கலக வாணவக் காரசுரர் மாயவும்
அன்பினர் பொலியவு மடியவர் மகிழவும்
இன்புடை யெழிலுருக் கொண்டு தன்பெயர்
ஒருதிரு முருக னாக நிறுவிச்
சூர்முத றடிந்து சுரர்குடி யோம்பி
வேரியந் தாமரை மெல்லடிச் சிற்றிடை
மாரியங் கூந்தல் மணிநகைத் துவரிதழ்
தேனொடு பாலொடு கண்டொடு செறுத்த
நானல் மதுர நன்மொழி மழலைத்
தேமொழிப் பாவைய ரிருவரை மணந்து
வளமலி தமிழிற் களவுங் கற்பும்
உளமுறக் காட்டிக் கொழிதமிழ்ப் புலமை
போற்றினர்க் கருளிப் பொற்றளி யாறினும்
வீற்றிருந் தருளும் விமல மூர்த்தி
என்னையு மாளத் தன்னுளங் கொண்டு
கல்லை எடுத்துக் கனிசெய் தாங்கு
வல்லை யுருக்கொடு வந்து தொல்லை
மலங்கெட நோக்கி வல்வினை யருத்திப்
புலங்கொள வோதிப் பொன்னடி சூட்டிய
ஆருயிர்க் குயிரை அருவிழி மணியை

நினைப்பினில் நினைப்பை யனைத்துமாய் நின்ற
குணப்பெருங் குன்றைக் கோதிலா வமுதை
உன்னுழி யென்பையு முருக்குமொள் ளொளியை
மன்னிய சிந்தா மணியை என்னை
விழுங்கி முன்னிற்கும் மேதகு மறிவை
துளங்கலில் தூண்டா மணிச்சுடர் விளக்கை
வெறுப்பன செயினும் விருப்புட் னருளும்
அருட்பெருஞ் சோதி யாண்ட சற்குருவை
நாளுங் கோளும் நன்றியில் பகையும்
பாழும் பிணியும் மிடியும் பறித்த
செய்தவக் கொழுந்தை யுன்ன
எய்தா தனவிலை யிருங்கடல் வரைப்பே—

——

## முருகன்

1

குருநாதா குருநாதா குருநாத வென்று கூப்பிட்
டுன்னருள் வடிவைக்கூடும் வகையறியேன்
ஒருவாத வைம்புலனு மொடுங்கலாம் மனமும்
ஒருநிலையில் நில்லாதா முள்ளத்திலாசை
அருகாதாம் ஒன்றிரண் டாய்வளா தின்றதையா
ஆறிரண்டு தோளுடைய வாறுமுக மணியே
வருவாயோ மனமிரங்கித் திருவருளை யெனக்கு
வழங்குவையோ மறப்பாயோ மாற்ற
[முணர்ந்திலனே. க.

கரும்பை நெரித்திட வூறுஞ் செழுஞ்சாற்றைச்
சாற்றில் காய்ச்சியெடுத்திடு பாலகக் கட்டியைக்
தரும்புதிய மதுரத்தை மதுரத்தை யுண்ணுஞ் [கட்டி
சமையத்திலெழுகின்றசாற்றவொண்ணுக்களிப்பை
அரும்புமந்தக்களிப்பில் வருமத்துவிதநிறைவை
ஆறுமுகக் குருமணியை அருளொளியைவெளியை
இரும்புமன முருகமலவிருளகல வினைகள்இரண்டுமற
வொருமையுட னிறைஞ்சி வழிபடுவாம். உ.

ஆறுதிருமுக முடைய முருக னெந்தன்றந்தை
ஆனைகுற மானிவர்க ளன்னையர்கள் மன்னும்
பேறருளித் தாலாட்டிச் சுவையமுத மூட்டிப்
பேசுவித்துக் கேட்டருளிப் பயனுதவி வளர்க்கும்
மாறில்செவிலித் தாயோ மூவரையு மாட்கொள்வண்
டமிழ்ச்சேயிழை மடந்தையயி லெனதுதோழன்
கூறுவடிவேல் காவல் கோழியிருள்விடியக் கூவு
மெனக்கினியொன் றுங்குறையொன் றுமில்லையேங.

அருட்டகடலே ஆருயிரே அரும்பொன்னே மணியே
ஆறுமுகப் பெருமானே யருந்துணையே யமுதே
தெருட்கடலே சிவகுமரா செவ்வேளே யுன்றன்
சேவடிக ளோரிரண்டுஞ் சிந்தைசெய வருளே
என்னுயிருக் கின்னுயிரே யெந்தைபெரு மானே
இராறு கையுடைய இளங்குருந்தே முருகா
உன்னருளுக் காளாகித் தமிழ்வளர்க்கும் பெரும்பே
றுதவுயையோ உதவாயோஉரைத்தருள்வாயெனக்கே. ச.

தென்னர்பெருமா னிசைத்தமிழும் சுவையும்
பயிலுஞ் செழுங்கூடல்
மன்னுபழமைப் பரங்குன்றில்
மருவுஞ்சுடரே வானவர்கோன்
மின்னுங் குறவர் மடமகளும்
பகிர்ந்து நுகரும் மென்கரும்பே
என்னின் னுயிரே வேன்முருகா
விருத்தாட் கமலம் மறவேனே. ரு

மருந்தேபிறவிப்பிணிக்குமறுவறு தொண்டருண்ணும்
விருந்தே யவியா மணிவிளக்கே வெற்பரையன்மகள்
முருந்தே சிவகுருவே வெற்றிவேற்குமரா வடியேன்
இருந்தேனருளமுதத் துளியுண்டினி யின்புறவே. சு.

## முருகன்

2

சிவசிவ முருகா அரகரமுருகா
சிவனருள் குமர—வடிவேலா
திசைமுகன் முதலா மமரர்கள்
இருதாள் தினநனி பரவும்—முதல்வோனே
தவமுனி யறிவு நிறைதர மறையின்
தனிமுதல் தமிழால்—அருள்வோனே
சரவணகமல மலருறு சுனையிற்
தழுவுருவடிகொள்—உமைபாலர்
பவவினை யகல இனியொரு பிறவி
படிவதுமொழிய—அருள்வாயே
பரசிவனுணர முதல்மொழி யகலப்
பழுதற வுரைசெய்—குருநாதா
நவவித மருவி யுலகுயிர் தழைய
நடமிடுமயிலில்—வருவோனே
நகைமணி யருவி யிழுமென வொழுகு
நலகதிர் காமப்—பெருமாளே.

குமர குருபர குமர குருபர
குமர குருபர—எனவோதிக்
குலவு மிருகழல் பரவு மடியவர்
கொடிய வினைபிணி—கடிதேக
அமல பரசுக நிறைவி னுணர்வுடன்
அமிழ வருள்புரி—முருகேசா
அமரர் மகிழ்வுற அசுரர் குலமுதல்
அவனை யுடலிரு—பிளவாகத்
தமர சலதியின் நடுவி லழிவுசெய்
சயில வகடுடை—வடிவேலா
தனத தனவென நடன மிகவிடு
தகவு மயின்மிசை—வருவோனே
நமது வினைகெட விறவி பிறவியு
நலிய வலிமல—விருண்மாய
நயன வருள்தர வருக கதிரையில்
நலமுதி ரமரர்—பெருமாளே.

அடிய ருறுதுயர் கடியு முருகனை
அமரர் தலைவனை நெடியமால்
அமரு மருகனை நறிய விரைகமழ்
அழகு குரவணி குமரனை
பிடியி னுருவமை முதல்வி யரனுட
னருளு மொருகரி முகவனைப்
பெரிய துணையென மருவியவழகனை
பிடியை மருவிய வழகனை
மடிய வலைநடு நெடிய மரமென
வளரு மவனுட லறுபட
வடிய சிலைநுதி மயிலை யெறிதரு
மயிலி லெழுதரு மொருவனைக்
கொடிய மிடிபிணி பகைமை யெனவரு
கொடுமை விடுபட வனுதினம்
குலவு மிருதய நடுவில் நினைபவர்
குறைவு சிறிதிலர் நிறைவரே.

அரிய மூலகினை யருளுமொருவனு
மமரர் தலைவனு மழியாத
அமரர் முனிவரு மடல்கொ ளவுணனின்
அதிக கொடுமைகள் பலகூறிப்
பிரிய முடனெமை யருள வருகுதி
பிழைகள் பலபல பொறு நீயெம்
பெரிய குருபர முருக சரவண
பெரும வெனவெகு துதியோத
உரிய துணைவர்கள் புடையில் வரவருள்
ஒழுகு முளமொடு சமர்மேவி
ஒளிகொள் வடிநெடு மயிலை யசுரன
துடல நடுவற விடுவோனே
கரிய விருண்மல வலிமை நடுவற
கமல மலரடி முடிசூடக்
கலப மாகத மயிலின் வருகுதி
கதிரை மலைமிசை வருவோனே.



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[755-வது பக்கத் தொடர்ச்சி]

புன்பொரு ளதுவெனப் போக்கக் கூறுவார்

வள்ளல் இராமனை வனத்திற் கனுப்பவேண்டு மென் பதேனும், அதுவும் ஆண்டு பதினான்காகவேண்டு மென்பதேனும், பரதனுக்கு அரசினைப் பெறுவதோடு இதனையும் இருவரங்களால் எய்தவேண்டு மென்பதே னும் மந்தரையின் கற்பனைகளே யன்றிக் கைகேயியின் கருத்தில் பிறந்த சூழ்ச்சிகளாகாமையை உட் கொண்டு நாம் இருக்கின்ற இச்செவ்வியில், ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார் 'கெடுத்தொழிந்தனை' என்று தொடங்குகின்ற செய்யுட் குரைக்க முயல்வதாம் பொருள் எத்துாரம் பொருத்தமுடையதாயிருக்க வல்லதென்பதை நோக்குதல் நேர்மையாம். ஸ்ரீமான் பாரதியார், கைகேயியின் கற்புக்கடனாற்றலென்னும் கருத்தொடு புனைந்து கற்பிக்கும் தேரிற்கோர் அச் சாணிபோல் நிகழ்கின்ற,

கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீ
ருடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கு
மடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்.

என்னுமப் பாசுரத்திற்கு இயல்பினில் இயையவல்ல பொருள்,— "உனக்கு அருமையான புதல்வனாகிய பரதனைக் கெடுத்து ஒழிந்துவிட்டாய். பொலிகின்ற கடல்சூழ்ந்த பூமியையுடைய தயரதமன்னன், மூத்த குமாரனாகிய இராமன் ஒருவனுக்கு என்றே கொடுத்த இந்தப் பெரிய இராச்சியம், அந்த இராமனது குலத் தில் வரிசையாய்ப் பிறப்பவர்களாகும் மூத்தகுமாரர் களுக்கும், அவ்விராமனை அடுத்திருக்கின்ற தம்பி யாகிய இலக்குமணனுக்கும் ஆகுமே அல்லாமல் மற் றவர்களுக்கு வரவேனும் அனுபவிக்கவேனுங் கூடி யது ஆகுமோ, என மந்தரை கூறினாள்" என்பதை ஏற் காமல், அவர், "கெடுத்தொழிந்தனை உனக்கு அரும் புதல்வனை, கிளர்நீர் உடுத்த பாரகம் உடையவனா யிருந்த தயரதன் உன் வயிற்றிற் பிறக்கும் ஒரு மகற் கெனவே, முன் சுல்கமாகப் பிரதிஞையுடன் கொடுத்த அயோத்திப்பேரரசு, உன் வயிற்று உதித்த பரதனும் ஒரு மகனுக்கும், இருவழியும் பேரரசர் மரபின்வந்த உபயகுலோத்துங்கனான அப்பரதன் குலக் கோமைந் தர்தமக்கும், அவனும் அவன்வழித் தோன்றினாரும் இல்வழி அடுத்த 'சுல்க'க்கிரம வாரிசான உன் தம்பி யுதாஜித்துக்கும் ஆவது அறமுறையாகும்! இவரல் லாப் பிறர்க்காவது அறமில்லை" என்னும் பொரு ளொன்றேஉரியதாகும் எனச்சாதிப்பாராகின்றனர். தன் மதம் நிறுவுமுன் பிறர்மதம் பொருந்தாதென வாதிக் கப்புகுதல் முறையே. இதனை உணர்ந்த அவர், "கைகே யியின் அறச்சிந்தைக்கும் அருங்கற்புக்கும் பொருந்து வதான பொருள் வேறு இக்கவி வருத்தமின்றித் தரு மாயின், அதைக்கொண்டு பொருந்தாப் புன்பொருள் போகவிடல் கடனும்: முறையும் அஃதே யன்றோ" என உன்னி "வருத்தமின்றி"த் தருகின்ற தம் பொரு ளிற்கு எதிராய், மற்றது பொருந்தாப் புன்பொருள் ஆவது எங்ஙனமெனப் பின்வருமாறு காட்டுகின்றார்.

இன்னுமிப்பொரு ளிச் செய்யுண்டை, தொடரமைப்பு, சொல்லிணக்கம், மொழியியல்புகளுக்கும் பொருந்தாமை காண்பாம். 'ஒரு மகற்கெனவே கொடுத்த பேரரசு,' என்ற தொடரை எடுப்போம். இராமனுக்கு மறுநாள் இளவர சபிஷேகத் திருநாளாய்த் தசரதமன்னன் சங்கல்பித்திருக்க, அதைச்சுட்டுங் கூனி பொருட்கமையக், 'கொடுக்கும்' என் னாது, 'கொடுத்த' எனப் பொருந்தா விறந்தகாலச்சொற் பிரயோகிக்க விடமில்லை. 'கோமுடி சூடுவ னாளை,' என முன்னுங் கவனித்துப் பேசியவள், ஈண் டிலக்கணத்தோ டியல்வழக்குங் கடி சொற் பெயு மடியாகக் காரணமில்லை. இங்கிதனைக் காலவழு வமைதியாக் கொள்வா மெனின், சொல்லின் செம்பொரு ளமையாது வழுக்காணுமிடத்தன் றே வழுநீக்க வழுவமைதியிலக்கணத்தில் வழிதேடவேண் டும்? நேர்பொருளே ஏற்புடைத்தாமிடத்துக் கவியி னிய லழகைப் பழுதாக்கி, வழுவமைத் தழுதலைவதேன்? இனி இளவரசபிஷேகமே மன்னவன் செய்விக்க முயன்றதாக வான்மீகத்தில் வலியுறுத்தப்பட்டிருக்க, "தேவபாடையி னிக்கதை செய்தவர், மூவர் தம்முளு முந்திய நாவினர் உரை" யறிந்ததன்படியே "தமிழ்ப் பாவினா லுணர்த்த" வந்த கம்பர் ஈண்டு இராமனுக்குத் தரப்போவதைக் குறிப் பரேல், தகவு மறந்து "பேரரசெ"ன்றதனைச் சுட்டியிரா ரன்றே? அன்றியும், கூனி இராமன்பால் வெறுப்பு மவம திப்பு முடையவள். இராமனையும், சீதை கோசலையையும் மதியாமற் பேசும் வழக்கமுடையவள்: தன் தலைவியை "அரசிற் பிறந்து, அரசில் வளர்ந்து, அரசிற்புகுந்து, பேரரசி" யானவளென்றும், அதற்கு மாறாகக் கோசலை அத்தகைய குலநலப் பெருமை குன்றியவளெனவுங் கருது பவள்.

> "ஆடவர் நகையுற, ஆண்மை மாசுறத்
> தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
> கோடிய வரிசிலை யிராமன்..........," என்றும்,
> "சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
> நிவந்த வாசனத்தினி திருப்ப," என்றும்,

துதிநிந்தைச் சொற்களா லிராமனைச் சுட்டுஞ் சுபாவமுடைய மந்தரை, மனமார அவனை 'ஒருமகன்' எனவும், அவனெய் தப்போகும் இளவரசைப் "பேரரசு" என்றும், அவன் மக்க ளைக் "கோமைந்த" ரெனவுங் கூறுவளா? ஈண் டிக் கவி முழுதுங் கூனிவாய்க் கூற்றாகவே, அவள் குணத்தோட மைந்த சொற்பிரயோகமன்றோ கம்பரிட மெதிர்பார்க்க வேண்டும். தனை யெதிர்த்த மானவரிட மிராவணனுக் குள்ள அலக்ஷிய புத்திற்கேற்ப, அவ னவரைக் குறிக்குந் தொறும் 'மனிதர்' என்னாது 'மனிசர்' என்றவன் வாயிற் சொற்பெய்யுங் கம்பர், மறந்தும் தகவு தவிரார். ஆதலால், கூனிவாயி லிச் சொற்க ளிராமனைக் குறித்தெழா என்ப தைக் கம்பர் மறந்து இக்கவி செயக் காரணமில்லை. மேலும் இராமனெய்து மரசினுக்கம், அவன் குலமைந்தர்க் கவண் வழித்தாவ தியல்பாகலாம்; மக்களில்வழி, இளையரில் மூத்த பரதனுக்குதவாமல், இலக்குவனுக்குமட் டாவதெப்படி? கவி யிற் கூனி பேரரசு—"மைந்தர் தமக்கும்," 'அடுத்த தம் பிக்கு மாம்' என்று விதந்து கூறுவதால், இராமனை யடுத்தி ருக்கு மிலக்குவனை யீண்டவள் குறிப்பதா யெண்ணில், பரத னுள்ளிட்ட பிறரனைவர்க்கும் அரசுரிமையாக்க மில்லை யென் பானாகும். வழிமுறை வரிசையில் அரசுரிமையைக் குறி யாது இராமனரசியலில் இலக்குவனெய்தும் இராஜபோகா னுபவங்களையே குறிப்பதாக் கொண்டு, அவ்வாக்கம் பரதன்

முதலிய பிறருக்கு இல்லை என்றதாக் கொள்வோமெனில், அதுவு மமைவுடைத்தன்றும்: ஏனெனில், அப்போ தனு பவித்தற்கிடமின்றிப் பின் பிறக்கவிருக்கும் இராமன் “கோமைந்தர்” தமையு மிங்குச் சுட்டி, அவர்க்கும் அப் “பேரரசு” ஆம் என்பதாலும், அம்மைந்தர் இலக்குவனைப் போலக் கேவலம் போகானுபவங்களைமட்டுமென்றி அரசுரிமையையுமே அடைபவராதலானும், ஈண்டுப் பேரரசு இராமனும் அவனுக்குப்பின் னடையு முரிமையுடையாரு மெய்தும் அரசுடைமையையே நுதலியாகவேண்டும். இனிப் பரதனையே ‘அடுத்த தம்பி’ எனக் கூனியிங்குச் சுட்டுவதாகக் கொள்ளற்கு மிடமில்லை. ஏனெனில், முன் பலமுறையும், இராமனரசெய்தில், இதனாற் கோசலையு மிலக்குவனுமே வீறு பெறுவ ரென்றும், பரத னவர்தனுய் வறுமையு மானக்குறைவு மெய்துவன் என்றும் வலியுறுத்துங் கூனி, இங்கு இராமனடையு மரசினுக்கம் பரதனுக்கும் பின்னு மெனப் பேசாள். அப்படிப் பேசுவதாகக் கொள்ளுவது, முன் கொண்ட பொருளொடு முரணுவதோடு, ஈண் டவள் வலியுறுத்தவந்த கருத்துக்கும் பொருந்தாதாகும். இராமன் வாழ்வு பரதன் தாழ்வேயா மெனக் காட்டிக், கைகேயியை விணக்கப் பேசுமிடையே, இராமனிறைமையாற் பரதனுங் குறைவின்றி நன்மை பெறுவதுண்டாகக் கூனி சொல்லுவ தமைவுடைத்தன்றும். எனைத்தானு மிச் செய்யுள் வாக்கியம் நா முதலிற் கொண்ட பொருளொடு சிறந்து பொருந்தாமை தெளிவாகின்றது.

இதுவேயுமின்றி, இராமன் ஜேஷ்டனிலையி லுரியதன்னரசைத் தானெய்துவ தியல்பென நாங் கருதுகின்றோம். உரிமையற்ற பரதன் தசரதன் கொடுத்தாலன்றி யரசு பெறுமாறில்லை. இராமனுக்கோ அரசு பிறப்புரிமையாகும். கவியில் ‘ஒருமகன்’ என்ப திராமனைக் குறிக்குமாயின், “உடையவன் ஒரு மகற்கெனவே கொடுத்த பேரரசு” என்று விசேடித்திருப்பதற்கு நியாயமில்லை. பிறப்புரிமையற்றவர் அரசுபெறுவதற்குத்தான், கொடையும் கொடுப்பாற் குடைமையும் இன்றியமையாதனவாம். மூத்தவனான இராமன் வரன்முறையிற் பிறப்புரிமை யுடையனாகவே, ஈண்டுக் கூனி அவனுக் கிளவரசபிஷேகம் பண்ணுவதைச் சுட்டுவதாக் கொள்ளுங்கால், தசரதனை ‘உடையவனா’கவும் அவன் கொடையா லிராமன் ‘பேரரசு’ பெறுவதாயுஞ் சிறப்பித்தல் பொருளும் பயனு மின்றாம். இன்னும், இராமன் தன் உரிமையை உள்ளபடி தானெய்தப்போவதிலும், உரிமையற்ற பரதனுக்கு வரவேண்டாததை அவனடையாமையிலும், பரதன் கெடுமாறில்லையன்றே! இப்படியிருக்க, ‘கெடுத்தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை,” என்று கடுமொழி கூறிக் கூனி பழிப்பதற்குப் பொருளுண்டோ? புதையல் பெற்றான்போலத் தனக்குரித்தில்லா ஒன்றை ஒருவ னடையின், அதனால் அவனுக்கிலாபமுண்டாகலாம். உரியதொன்றைக் கையறவாலோ, கவனக் குறைவாலோ, இழக்கநேரி னதனா லவன் கேடெய்தலாம். கிடைக்க வேண்டாதது கிட்டாததாற் புத்துதியம் பெறுவதற் கில்லையாமேயன்றிக் கேடுறுவ தெப்படியாகும்? கிரமமற்ற பேரரசை வஞ்சவலியால் வாங்கித்தர விசையாமைக்காகப் பரதன் “நற்றாய் தீயளா”வ தெப்படி? வரன்முறையி லிராமனுக் குரியதை யவனுக்களிப்பதால், “தந்தையுங் கொடியவனா” வதுண்டோ? இதனாற் றசரதன் “அந்தரம்தீர்ந் துலகளிக்கு நீர்”மைய னாவதுதா னெப்படி? “கோசலை மதியினால் வாழ்ந்தனளா”வ தென்ன? அவள்மகன் தன்னுரிமையைத் தானடைவதில் அவளுக்குச் சிந்தனை விரிவானேன்? பாட்டனைப்பார்க்கக் கேகயத்துக்குப் பரதனை...அரசன் ஆணையால்...சேணிடைப்போக்கிய”தில், கூனி இன்று கண்ட புதுப்பொருள்தா னென்ன? மந்தரைவாயிற் கம்ப ரித்தனையும் பொருளின்றி வீணே புகுத்திவைப்பாரா? இனைய பலவற்றானும் நா மறியக் கிடப்பது, இக்கவியிற் கூனிகூற்றிற்கு இத்துணை முரணுடைப்பொருள் கொள்வது பொருந்தாது: வேறு தகவு மிகவுடையதோர் செம்பொருள் காண்பதறிவா மென்பதேயாம்.

ஸ்ரீமான் பாரதியார் எண்ணும்வண்ணம் முன்னைய பொருளில் இம்முரணெலாம் புகுந்து இடையூறு செய்வது உண்மையோ வென்பதை ஆராய்தல் இனிக் கடனாகின்றது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்ட்கள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
“பால சுதா” (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.





# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

கிருமபோன்

## சங்கீத கீர்த்தனும்ருதம்.

இதுபோது கிரும்போன் என்னும் விஞ்ஞான கருவியில்பாடிவரும்திருச்செந்தூர் ஷண்முகவடிவு எஸ். வி. சுப்பய்யா பாகவதர், டி. எம். காதர்பாட்சா, எஸ். ஆர். கமலம், பெங்களூர் தாய், மிஸ். கெ. ரங்கநாயகி, சேலம்அம்மா கண்ணு, திருவிடமருதூர் பவானி, தனுக்கோட்டியும் சகோதரியும், சுந்தரியும் வரலட்சுமியும், வி. சுப்ரமண்ய பாகவதர், பவூன் ஷண்முகம், A. S. ராசப்பா, கனகரத்தினமும் மாணிக்கமும், சேலம்கோதாவரி, லோகாம்பாள், பார்வதி அம்மாள், வி. சாரதாம்பாள், சிவக்கொழுந்து, வனஜாட்சி, வேதம்மாள், வீணை தனம் குமாரத்திகள், பிரம்மஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர், நியமம் நடராஜ பாகவதர், எ. சாமி நாயுடு, வைத்தியநாத பாகவதர், மற்றுமுள்ள ஸ்திரீ திலகங்களும் அரங்க மேடையில் குயிலோசையோ காந்தர்வ நாரதர் கிம்புருடர் தொனியோ என்று சந்தேகிக்கும் வண்ணம் தென்னுடெங்கும் அமிர்த மழை பொழிந்துவரும் மாஸ்டர் எஸ்-ஜி கிட்டப்பா, கே-பி சுந்தராம்பாள் முதலிய நடிக ரத்தினங்களுடைய முக்கனி ரசத்தையொத்த (670-பக்கங்களுக்கு மேற்பட்ட) கீர்த்தனை, விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய அரும்பெறும் பாடல்களை ஒருங்கே யழைத்து ராக தாளங்களுடன் பிளேட் நெம்பருடன் அழகியகிளேஸ்தாளில் அச்சிட்டுக்கண்ணைக்கவரத்தக்கபயிண்டுசெய்து எங்களிடம் சொற்ப விலைக்குத் தயாராக யிருக்கிறது.

**தனி பாகம் ரூ. 1-0-0. மூன்றுபாகம் கட்டடம் ரூ. 2-8-0.**

ஷண்முகானந்த புத்தக சாலே,
நயினியப்பநாயகன் தெரு, பி. டி. மதராஸ்.

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னே.

Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply to the Company to-day.*

**R. G. Das & Co,** OR **Mr. T. A. Anantachari** B.A.
*Managers.* *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

## கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

### பிரசுரங்கள்.

### சங்க நூல்

சென்னேப்பச்சையப்பன் கலாசாலேத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதும் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையிரேரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி**

**திருவல்லிக்கேணி,** :: :: சென்னே.



## வர்த்தமானம்

சமீபத்தில் மாஸ்கோ சென்ற டாக்டர் ரவீந்திரநாத டாகூர் 15 தினங்கள் அங்குத் தங்கிப் பின் பர்லினிற்குப் பிரயாணமாவார் என்று மாஸ்கோச் செய்தி கூறுகின்றது.

***

இர்வின் பிரபுவிற்குப் பிறகு லார்ட் ரொனல்ட்ஷே ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்படுவார் என்று லண்டன் பத்திரிகைகள் கூறுகின்றன. லார்ட் ரொனல்ட்ஷே வங்காள கவர்னரா யிருந்தவர்.

***

மோரதாபாத்தில் தேர்தல் நடந்தபொழுது கலகம் விளைந்ததால்அக்கலகத்தைஅடக்குவதற்காக துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. அதைப்பற்றி அரசாங்கத்தார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:--நைனிடால் டவுன்ஹாலில் முஸ்லிம் தொகுதிக்கென எலக்ஷன் நடந்தது. காங்கிரஸ் தொண்டர்கள் அங்குவந்து கூடி மறியல்செய்தனர். வேடிக்கை பார்க்கவந்த ஜனங்கள் ஓட்டுக்கொடுக்கு மிடம்சென்று ஓட்டுச் சீட்டுகளைக் கிழித்து எரிந்தனர். அப்பொழுது ஜனங்கள் கல்லெறிந்தனர். போலீசார் எவ்வளவு சொல்லியும் ஜனங்கள் கேளாததால், துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 46 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் வயித்தியசாலையில் இறந்தார். இப்பொழுது அமைதி ஏற்பட்டுள்ளது.

***

லண்டனில் கூடிய ஆயுதப் பரிஹாரண மஹா நாட்டில் பிரஞ்சு கப்பல்படை மந்திரியான டுமஸ் நீல் என்பவர் கூறியதாவது:—

உலகத்தில் குடியேற்றநாட்டு அந்தஸ்தைப் பெற்ற நாடுகளைத் தனது ஆட்சியின்கீழ் வைத்துக்கொண்டிருக்கும் நாடுகளில் இங்கிலாந்து முதல் ஸ்தானத்தையும், பிரான்ஸ்இரண்டாவது ஸ்தானத்தையும் வகிக்கின்றன. இந்தக் குடியேற்ற நாடுகளைக் காப்பதற்குப் பிரான்ஸினிடம் போதுமான படை இருக்கவேண்டியதுதான். லண்டன் மஹாநாடொன்றில் இவ்விஷயத்தை நான் நன்கு வற்புறுத்தி யிருக்கின்றேன். அதற்குப் பிறகு இப்பொழுது புதிய மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. எனவே மீண்டும் மீண்டும் இவ்விஷயத்தைப்பற்றி ஆயவேண்டுவதில்லை.

***

அமெரிக்கா, கனடா முதலிய விடங்கள் சென்று இப்பொழுது இங்கிலாந்து திரும்பியுள்ள ஸர்ஜான் சைமனுக்கு பிரிட்டிஷ் வக்கீல் சங்கத்தினர், ஒரு விருந்தளித்தனர். அப்பொழுது ஸர்ஜான் சைமன் கூறியதாவது:—

"அமெரிக்கரும் கனடா ஜனங்களும் இந்திய விஷயங்களை ஆழ்ந்து கவனித்து வருகின்றனர். ஆனால் இந்தியாவின் தற்கால நிலைமையை அவர்கள் இன்னும் நேராக அறியவில்லை என்றே நான் நினைக்கின்றேன். நான் இந்திய நிலைமையைப்பற்றிப் பல பிரசங்கங்கள் செய்தேன். இருநாட்டாரும் மிகுந்த சிரத்தையுடன் விஷயங்களைக் கேட்டனர். அமெரிக்கர் இந்தியாவைப்பற்றிய உண்மையான நிலைமையை அறியும் விஷயமாய் என்னால் இயன்றவளவு வேண்டுவது செய்துளேன் என்று நம்புகின்றேன்"

***

ஸர்வகட்சி மஹா நாட்டிற்கு ஒரு பிரதிநிதியாக நியமிக்கப்பெற்றுள்ள புதுக்கோட்டை நிர்வாகசபைத் தலைவர் ஸ்ரீமான் டி. ராகவையா அவர்கள் இங்கிலாந்திற்குப் பிரயாணமாகும்போது ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

"ஸர்வகட்சி மகாநாட்டிற்கு நேர்முகமான பிரதிநிதியல்லன் நான். சென்னை சமஸ்தானங்களைப்பற்றி மைசூர் திவான் ஸர் மீர்ஸா இஸ்மேலுக்கு ஆலோசனை கூறுபவராகவே போகிறேன். திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை சமஸ்தானங்கள் நன்கு தேர்ந்த பிரிட்டிஷ் முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று சமஸ்தானங்களிலும் பிரதிநிதி ஸ்தாபனங்களிருக்கின்றன. சமஸ்தானப் பிரஜைகளுக்குஅவற்றில் பிரதிநிதித்துவ மிருக்கிறது. திருவாங்கூரில் ஸ்ரீமூலம் ஜனப்பிரதிநிதி சபையைத்தவிர இந்தச் சமஸ்தானங்களில் உத்தியோகஸ்த ரல்லாதார் அதிகமாயுள்ள சட்ட சபைகளிருக்கின்றன. அவற்றிற்குத் திட்டமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வழியில் தென்னிந்திய சமஸ்தானங்கள் வேறுபல சமஸ்தானங்களைவிட முன்சென்றிருக்கின்றன. இவை சற்றேறக்குறையப் பிரிட்டிஷ்இந்திய மாகாணங்களைப் போலிருக்கின்றன. இந்தியசமஸ்தானத்திலுள்ள ஆட்சிமுறை, சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்தியாவும் ஒன்றுசேர்ந்து பொதுவான விஷயங்களைத் தீர்த்துக்கொள்ளுவதை பாதிக்காது. இந்த விஷயங்கள் நாளுக்குநாள் முக்கியத்தில் அதிகரித்து வருகின்றன. இந்தப் பொதுவான விஷயங்களை யோசித்து நிர்வகிக்க இந்திய சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் இந்தியாவையும் ஒரே மேடைக்கு எவ்வாறு கொண்டுவருவதென்பது ஸர்வகட்சி மகாநாட்டில் ஒரு முக்கியப் பிரசனையாகவிருக்கும். ஆனால் விஷயம் பார்வைக்குத் தோன்றுவதுபோல் அவ்வளவு சுலபமானதன்று. முதலாவதாக இந்தியாவில் 612 சமஸ்தானங்களிருக்கின்றன. அவற்றின் நிலைமையும் ஆட்சிமுறையும் வெவ்வேறாக விருக்கின்றன. சில பொதுவான கோட்பாடுகளும் பொதுவான வழிகளும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் பொதுவாகச் சேர்ந்து கொள்ளுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இது மிகவும் கஷ்டமான வேலையாகவிருக்கும். எல்லாச்சமஸ்தானங்களும் ஒரு பொதுவான கொள்கையை ஒப்புக் கொள்ளுவதாக வைத்துக்கொண்டால் உடனேயும் முடிவாயும் சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களுக்கும் பிரிட்டிஷ் இந்திய மத்திய பீடத்திற்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தை அடுத்தாப்போல் நிர்ணயிக்கவேண்டும். சமஸ்தானங்களின் நன்மையும் பிரிட்டிஷ் இந்தியாவின் நன்மையும் நேராக வரையறுக்கப்படவில்லை. பொது விஷயங்களைத் தவிரச் சமஸ்தானங்களின் சில உரிமைகளும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் சில உரிமைகளும் ஒன்றாக விருந்தபோதிலும் வேறுசில சமஸ்தானங்கள் அல்லது பிரிட்டிஷ் இந்தியமாகாணங்களின் உரிமைகளுடன் முரண்படும். சில சமஸ்தானங்களுக்குத் தனியாகப் பொருளாதார விஷயங்களிருக்கின்றன. உதாரணமாக, கொச்சி திருவாங்கூர் போன்ற கடலோரத் தேசங்கள் துறைமுகம் கடற்சுங்கம் போன்ற சில தனி விஷயங்களைப் பெற்றிருக்கின்றன. இந்த விஷயங்களில் என்னாலான உதவிகளைச் செய்ய நான் எண்ணியுள்ளேன்"

இனம்! **வைத்திய வித்தியா** இனம்!!

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

**மதனமஞ்சரி பார்மஸி,**
**1/94, கைனு பஜார், மதராஸ்.**

18923

KALANILAYAM. REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணு | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. 1-0-0.

முத்தையா புக்டிப்போ,

தபால் பெட்டி 99, சென்னை.



## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும்.ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தா காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்ஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)